# வேட்டைக்கு மான் இருக்கா

## 1

சீதாவைக் காணோம்!

நரசிம்மனின் மூத்த சீடனும், வேத பாடசாலையின் பிரதான மாணவனுமான விசுவத்தையும் காணோம்!

நட்ட நடு ஹாலில், அகன்ற பிரம்பு சாய்வு நாற்காலியில், கன்னத்தில் கையூன்றி, கிழச்சிங்கம் போல உட்கார்ந்திருக்கிறார் நரசிம்மன். எதிரே கை கட்டி-அவரின் பிள்ளைகளும், மாப்பிள்ளைகளும்...

பாடசாலைப் பிள்ளைகள் வாசல் திண்ணையில்...

வீட்டுப் பெண்கள் இரண்டாம் கட்டின் நடையில்...

ராகவன் மட்டும் பூஜை அறையில்...

சீதாவின் மாமா ராமு, ஒருவித தர்மசங்கடத்துடன், கூடத்து மூலையில்-தூணில் சாய்ந்து நிற்கிறான்.

வாசலில் இரும்புக் கதவு உட்புறமாய் தாழிடப்பட்டிருக்க-நரசிம்மன் அடிக்கொரு தரம் வாசலைப் பார்த்து பெருமூச்செறிகிறார். சுற்று வட்டாரத்தில் ஆறு, குளம்,



Vennila

கிணறு எல்லாவற்றிலும் தேடியாகி விட்டது. பலனில்லை. இன்று வரையில் அவர் போட்ட கணக்குப் பிசகியதே இல்லை! சீதாதான் அவர் கணக்கை பொய்ப்பித்து விட்டாள்.

ஐந்து வருடங்களுக்கு முன் அவளை அவர் கண்டெடுத்த நாள் இன்றளவும் அவர் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது...

நரசிம்மனுக்கு பணம் ஒரு பொருட்டே இல்லை. அந்த வைரச்சுற்றி-சுமார் முப்பத்திரண்டு கிராமங்களில் பெரும் பாலும் அவரது நிலபுலன்கள்...

அது என்னமோ அவர் கைராசி. வேண்டாம் என்று பிய்த்துப் போடும் கொடி கூட காய்க்கும். பணம்-இரும்புப் பெட்டியில் கரன்சியாகவும்-பாங்கில் நிரந்தர வைப்பு நிதியாகவும்-நஞ்சையாகவும்-மச்சு வீடுகளாகவும் – தென்னந் தோப்பு, மாந்தோப்புகளாகவும்-அந்த வீட்டுப் பெண்களின் உடம்புகளையே மூடும் அளவுக்கு நகைகளாகவும் உரு வெடுத்திருந்தது.

சில பேருடைய அதிர்ஷ்டம். வேண்டாம் என்று சொன்னாலும்–செல்வம் அவர் வீட்டு வாசலில் அடம் பிடித்து உட்கார்ந்திருக்கும். கை கட்டிச் சேவகம் பண்ணும்.

நரசிம்மனுக்கு ஒரு விஷயம் மட்டும் நேராக இருந்திருந்தால்-மனுஷருக்கு ஒரு குறையுமே இல்லை என்று அடித்துக் கூறலாம். திருஷ்டிப் பரிகாரமாய் ஏதாவது ஒன்று வேண்டுமல்லவா?

நாலு பிள்ளை. மூன்று பெண்கள்... எல்லோரையும் வளர்த்து ஆளாக்கி, மூன்று பெண்களுக்கும் மணமுடித்து, மாப்பிள்ளைகளை வீட்டோடு நிரந்தரமாக்கி, மூத்த மருமகள் வந்த பின்தான் நரசிம்மனின் மனைவி கண்ணை மூடினாள்.



இன்னும் கொஞ்ச நாள் இருந்திருப்பாள், ராகவன் மட்டும் ஒழுங்காக மற்ற பிள்ளைகளைப் போல இருந்திருந்தால்...

ராகவன்-நரசிம்மனின் இரண்டாவது மகன். சுற்று வட்டாரத்தில் நரசிம்மனின் செல்வாக்கும், கண்டிப்பும் நேர்மையும் எத்தனை பிரசித்தமோ, அதைவிட ஒரு மடங்கு அதிகமாய் பிரசித்தம்-ராகவனின் லீலா விநோதங்கள்.

கொஞ்சமாய் ஆடவில்லை. அப்பா-போகிற வழிக்குப் புண்ணியமாய் வேத பாடசாலை நடத்தினால்-பின்னே, கன்னிப் பெண்களை தனியே அழைத்து காமத்துப் பால் சொல்லிக் கொடுத்தான்.

ஊருக்கு எந்த நாடகக்காரியும், சினிமா நடிகையும் வந்து விடக் கூடாது. ராகவன் தன் ஜமாவோடு அங்கு தான் உட்கார்ந்திருப்பான்.

பெற்றவள் சொல்லிச் சொல்லி அழுவாள்.

“நம்ம குடும்பத்திலேயே ஒவ்வொரு தலைமுறையிலேயும் ஒரு மகான்–ஒரு யோகி அவதாரம் பண்றது உண்டு. எங்க தலைமுறைக்கு உங்க பெரியப்பா காசியிலே மடம் கட்டி, அங்கேயே ஜீவ சமாதி அடைந்தார். அவர் விட்டுட்டுப் போனதுதான் இந்த வேத பாடசாலை... ஏதோ-இந்த தலைமுறை யோகிய நான் பார்க்கலைன்னாலும் போறது.... சனியன் இந்த கண்றாவி எல்லாத்தையுமாவது பார்க்காமப் போகக் கூடாதா... என்னை எதுக்காக கடவுள் இன்னமும் வச்சிருக்காருன்னே தெரியலையே.”

“இவனாலே என் புக்ககத்து மனுஷாகிட்ட எல்லாம் கனக்கு கெட்ட பேரும்மா... என் நாத்தனார் பொண்ணை, என் கல்யாணத்தும் போது ராகவன் கலாட்டா பண்ணியிருக்கான்.”

மூன்றாமவள் சுசீலா மாய்ந்து மாய்ந்து அழுவாள்.

Vennila

மூத்தவன் சீனுவாசன், கல்யாணமாகி வெகு நாட்கள் வரையில் மனைவியை தன் வீட்டுக்கு அழைத்துக் கொள்ளவே இல்லை. அவனே, பாதிப் பொழுது மாமியார் வீட்டில் இருந்து விடுவான்.

“லட்சுமி எப்படா இங்கே வரப்போறா? கல்யாணம் எதுக்காகப் பண்ணித்து? இப்படி பொறந்த வீட்டுலேயே இருக்கறதுக்கா?”

- பெற்றவள் ஒரு நாள் இப்படிக் கேட்டதற்கு, நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல பதிலளிப்பான், அவன்.

“எதுக்கு? இந்த வீட்டுல, என் பொண்டாட்டிக்கு என்ன பாதுகாப்பு இருக்கு? நானேதான் அவளை இங்கே வரவேண்டாம்னு சொன்னேன். முதல்லே உன் ரெண்டாவது பிள்ளைக்கு ஏதாவது ஒரு வழிபண்ணு— அவன் இந்த வீட்டுல இருக்கிற வரைக்கும் வெளியிலே இருந்து ஒரு பொம்மனாட்டி இந்த வீட்டு வாசலை மிதிக்கமாட்டா.”

அம்மா முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்.

“இதுக்கு ஒரு விடிவே வராதா...”

வந்தது.

மாயவரத்தில் வந்து தங்கி, சுற்று வட்டாரத்தையே ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருந்த தங்கமணி என்கிற நாட்டியக்காரி மூலமாக...

எந்த நேரத்தில் காசை எடுத்துக் கொண்டு ராகவன், தங்கமணியின் வீட்டுக்குப் போனானோ— சகலத்தையும் மறந்து, அங்கேயே தங்கி விட்டான். பணம் தேவையானால் மட்டுமே ஊருக்கு வருவான்.

இதற்கும் அம்மா அழுதாள். அழுவதைத் தவிர அவளுக்கு இந்தப் பிறவியில் செய்வதற்கு எதுவுமே இல்லை என்கிற மாதிரி அழுதாள். சீனுவும், ராகவனுக்கு அடுத்



தவனான நாணா என்கிற நாராயணனும் ஒரே போடாகப் போட்டு அம்மாவை அடக்கினார்கள்.

“ஜெட்மாஸ்டர் பொண்ணைக் கையப் பிடிச்சு இழுத்தான். மளிகைக் கடைக்காரர் பெண்டாட்டியப் பார்த்து கண்ணடிச்சான்கற அவப்பேரு இல்லாம - இந்தத் தொழிலுக்குன்னு இருக்கிறவகிட்ட போய் சேர்ந்துட்டான் இல்லே? பேசாம இரு. இனிமேயாவது இந்த வீட்டுக்கு வர நாட்டுப் பொண்ணுங்க தைரியமா வரட்டும்.”

நரசிம்மனும் இதையேதான் நினைத்தார்.

‘பாவி, ஒரு வழியா அவ கூட எங்கேயாவது கண் காணாத தேசத்துக்குப் போகமாட்டானோ... இங்கேயே அடுத்தளத்துல உட்கார்ந்து, இப்படி என் பிராணனை வாங்க வேண்டாமே...’

எல்லாருக்குமே ராகவன் ஊரை விட்டே போனால் தேவலை என்கிற எண்ணம். ஆனால் அவனை உலகத்தை விட்டே மூட்டை கட்டி அனுப்பும்படியான சம்பவம் நிகழ்ந்து விட்டது.

ஒரு நாள் அதிகாலையில் தங்கமணி கத்தியால் குத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டுவிட்டாள். வயிற்றிலிருந்து குடல் சரிந்து, பக்கத்தில் ரத்தக் குட்டையில் ஊறியபடி ராகவனைப் பார்த்து சிரித்தது.

அன்றிரவு ராகவன் தன் சொந்த ஊரிலும் இல்லாமல் மாயவரத்திலும் இல்லாமல் நடுக்காட்டில் மக்கர் செய்த காருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தான்.

விடிகாலையில் வீட்டு வாசலை மிதித்து, திறந்த கதவினூடே புகுந்து-இந்நேரம் தங்கமணி குளித்துக் கொண்டிருப்பாள் என்கிற ஊகத்துடன் குளியலறையின் இந்தப் பக்கமாய் நின்று தணியாத ஆசையுடன் குரல் கொடுத்து...

“தங்கம்... தங்கம்... ஒட்டியாணத்துக்குப் பணம் ரெடி... தங்கமணி... மணிக்குட்டி... குளிச்சிட்டிருந்தா என்ன

Vennila

... என்று கேட்கக் கூடாதா — என்னைக் கையாளாகாத வன்று சொல்லுவியே-இப்ப என்ன சொல்றே... தங்கம் — தங்கச்சிலை!''

சமையற்காரம்மா கடுப்புடன் எட்டிப்பார்த்தாள்.

''அட ஏங்க ஆளில்லாத பாத்ரும் பக்கத்துல வந்து நின்னுட்டு புலம்பறீங்க! மாடியிலே இருந்துதானே இறங்கி வர்றீங்க... ராவெல்லாம் சண்டை போட்டு, கையிலே கிடைச்சதை உடைச்சுத் தள்ளிட்டு, இப்ப இங்கே வந்து என்ன கொஞ்சல் வேண்டி கிடக்கு?''

ராகவன் பேய் விழி விழித்தான்.

''சண்டையா...? நானா...? ஐயோ, தங்கமணி கூட சண்டை போடற அளவுக்கு நான் என்ன கிராதகனா...? நேத்து சாய்ந்திரமே நான் ஊருக்குப் போயிட்டேனே— இப்பத்தான் வர்றேன்?''

''அப்ப மாடியிலே யார் கூட அம்மா சண்டை போட் டாங்க? நீங்க நேத்து ராத்திரி வீட்டுல இல்லையா...?''

''உன் மேல சத்தியமா இல்லே...''

''அப்ப, டிராமா கம்பெனி முதலாளியா இருக்கும். அம்மா இன்னும் எழுந்தே வரல்லே. மாடியில் போய்ப் பாருங்க!''

''நானே போய் எழுப்பறேன்... தங்கம்மாவை... குட் மார்னிங் தங்கா... ஒரு கொல்டு... ஹவ் ஆர் யூ...? ராத் திரி நானில்லாதப்ப கண்டவனையும் ஏன் உள்ளே விட்டே...? எவன் அவன் உன் தூக்கத்தை... பே... பே... பே... அய்யோ... அய்யய்யோ... தங்கமணி, என்னாச்சு உனக்கு... சமையற்காரம்மா.... போ... போ...லீஸ்!''

அவன் அலறிக்கொண்டே ஓடிவர... கண்மூடித் திறக் கும் நேரத்தில் கூட்டம் கூட, போலீஸ் வர, தங்கமணியின் காணக் கிடைக்காத அந்த நிலையை-கேமரா, தன்னுள் அவசர அவசரமாய் சிறை பிடிக்க...



மாலை பத்திரிகைகளில் எல்லாம், ராகவனின் விலங்கு மாட்டிய புகைப்படமும், பத்தி பத்தியாய் செய்தியும் சிரிப் பாய் சிரித்தது.

''ஜமீன்தாரின் இளைய மகன் ராகவன் கைது!''

''மைனர் ராகவனின் மன்மதக் கொலை!''

''தங்கமணிக்கும் ராகவனுக்கும் இடையில் பகை... ராக வன் கையில் கிடைத்த பூச்சாடியை எடுத்து தங்கமணியின் மீது வீசியதை, தான் கண்கூடாகப் பார்த்ததாக சமையற் காரி சாட்சியம்.''

''ஒட்டியாணம் கேட்டதால்-குடலை உருவிப் போட் டார் கொலையாளி ராகவன்.''

நரசிம்மன் இந்தச் செய்தியினால் இடிந்து போய் உட் கார்ந்தார் என்றால் - அவர் மனைவி, இப்படி ஒரு பிள்ளை யைப் பெற்ற பாவத்துக்காக முட்டி மோதிக் கதறியவள் - ஒரே வாரத்தில் கண்ணை மூடினாள்.

தங்கமணி கொலை வழக்கு சுமார் மூன்றாண்டு காலம் நடந்தது.

தூக்குக் கயிற்றின் நுனி - தலையில் இடிக்கும் வரையில் கொண்டு செல்லப்பட்ட ராகவன் - யார் செய்த புண்ணியத் தாலோ அதிசயமாய் உயிர் தப்பினான்.

உண்மையான குற்றவாளியான தங்கமணியின் மாஜி கணவனும், நாடகக் கம்பெனி முதலாளியுமான துரையை போலீஸ் கைது செய்து இவனை விடுதலை செய்த போது-

ராகவன் பிரமை பிடித்தவன் போல இருந்தான். தங்க மணியின் மரணத்தை விடவும் - தன்னுடைய மரணத்தை- அதன் வாசல் வரை சென்று தரிசித்து விட்டுத் திரும்பிய தாலோ என்னவோ, யாருடனும் பேசாமல் அறைக்குள் முடங்கிக் கிடந்தான்.

Vennila

பெண்ணின் கொலுசு சத்தம் கூட, அவனை அதிர வைத்தது...

எப்பொழுதாவது மாலை நேரங்களில் வெளியே வருவான். அப்பா, சிறுவர்களுக்கு வேதம் சொல்லிக் கொடுப்பதை தள்ளி நின்று பார்ப்பான். இரவு ஊரடங்கும் வேளையில் பக்கத்தில் உள்ள கோவிலுக்கு போய் அம்மனை சற்று நேரம் கூர்ந்து பார்த்தபடி நிற்பான். மற்றபடி யாரிடமும் அதிகம் பேசுவதில்லை. மகனின் மாற்றம், நரசிம்மனுக்கு புதிய தெம்பை அளிப்பதாய்...

"இப்படி ஒரு சம்பவம் நடந்துதான் குழந்தை மாறணும்னு இருக்கு"...

அப்பொழுது கூட அந்த வீட்டுப் பெண்களோ, மாப்பிள்ளைகளோ நம்பவில்லை.

"பிறவிக் குணம் எப்படி மாறும்?"

அதுவும் நரசிம்மனின் மூத்த மகள் பார்வதிக்கு வாய் அதிகம். பெற்றவள் போன பின்பு அவளே அந்தக் குடும்பத்தின் ராணி.

யாருக்குமே நரசிம்மனை எதிர்த்து பேச முடியாது. ஆனால், இவள் மட்டும், பின்கட்டு முற்றத்தில் தனது ஏராளமான உடம்பை பரவ விட்டபடி அமர்ந்து நக்கலாகக் குரல் கொடுப்பாள்.

"உக்கும், அப்ப திருட்டுப் பூனை, இப்ப ருத்திராட்சப் பூனை. எல்லாம் கொஞ்சநாள் போனாத்தானே தெரியும்."

நாளாக ஆக - நரசிம்மனை புதுக் கவலை பிடித்துக் கொண்டது.

ஸ்திரீ லோலனாக இருந்த போது கூட, ராகவனின் ஜாதகம் கேட்டு பெண்ணைப் பெற்றவர்கள் நாலு பேர் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

"கேட்டிருப்பீரே... பையன் வீட்டோட ஒரு நாழி தங்க மாட்டான். ரொம்பவும் செல்லம் கொடுத்துட்டோம்.



ஊருல ஒரு பொண்ணு விடாமச் சுத்தறான்... பொண்ணைக் கொடுத்துட்டு, நாளைக்கே நீர் என்னை வாயில வந்தபடி ஏசுவீர்... அந்தக் கஷ்டத்துக்கு இப்பவே உள்ளதைச்சொல்லிடறது மேல்!"

"அப்படிச் சொல்லக்கூடாது சுவாமீ— இளவயசு. கேட்டப்ப எல்லாம் பணத்தை அள்ளித்தர குபேரனாட்டம் நீங்க இருக்கேள். எல்லாம் வயசாக வயசாகப் பொறுப்பு வந்துடும். அதுவும் எங்க பொண்ணு ஜாதகம் இருக்கே... அப்பேர்ப் பட்ட யோக ஜாதகமாக்கும்."

- இப்படி எத்தனை பேர் நரசிம்மனின் காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சாத குறையாகச் சொன்னார்கள். இதில் எத்தனை படித்த பணக்கார இடத்துப் பெண்கள்.

இப்பொழுதோ...

தங்கமணியின் கொலைக்கு இவன் காரணமில்லை என்றாலும், அதை கோர்ட்டு நிரூபித்து விட்டது என்றாலும், ஜனங்கள் நம்பத் தயாராக இல்லை.

"எல்லாம் செஞ்சிருப்பான். செய்யக்கூடியவன்தான். நரசிம்மன் துட்ட பணமிருக்கு— அது பாதாளம் வரைக்கும் பாய்ஞ்சு, பிள்ளையை மீட்டுக் கொண்டு வந்திருக்கு..."

"அது சரி... இப்ப என்னமோ- அம்பாள் அம்பாள்னு கால் வேட்டி கட்டாத குறையா அலையறானாமே நிஜம்தானா?"

"ஆமாமா... நல்ல பொண்ணா இருந்தாச் சொல்லுங்கோ... கல்யாணத்தைப் பண்ணி வச்சுடலாம்னு இருக்கேன்னு நரசிம்மன் கூடச் சொன்னார். கண் தெரிஞ்ச எந்த மடையன்தான் இந்தப் பிள்ளைக்குப் பொண் கொடுப்பான்? மகா பாபமில்லையா.."

"நீங்க என்ன சொன்னீங்க?"

"மூத்து முத்தா வரன் இருக்கு... மூணாவது பிள்ளையாண்டான் நாணாவுக்கு வேணுமானாச் சொ

Vennila

இல்லே நாலாமவன் பரகுவுக்கு சொல்லுங்கோ... இவனுக்கு வரன் சொல்ல என்னால முடியாதுன்னு சொல் விட்டேன்.''

–இப்படி முகத்துக்கு நேரே சொன்னார்களா இல்லை பூசி மெழுகிச் சொன்னார்களா தெரியாது.... ராகவனுக்குப் பெண் கிடைப்பது குதிரைக்கொம்பு என்பது நரசிம்மனுக்குத் தெரிந்து விட்டது. அவனுமே தனக்கு கல்யாணமே வேண்டாம் என்றும்–தம்பிகளுக்கு பெண் பார்க்கும்படியும் சொல்லி விட்டான் என்றாலும்-பெற்றவருக்கு மனசு ஆற வில்லை.

வீட்டோடு இருந்து, ராஜ போகத்தை அனுபவித்து வரும் மூன்று மாப்பிள்ளைகளின் வீடுகளிலும் பெண்களுக்கு பஞ்சமே இல்லை.

யாருமே வாய் திறக்காத போது இவருக்கு தானே வலிய போய் கேட்கவும் கவுரவம் தடுத்தது. ஆனாலும் கேட்கவில்லையா அவர்? கேட்டாரே? பலன்...?

ராகவன் சொல்கிற மாதிரி-அடுத்தவன்களுக்கு இவனை வாசற்படிக்கல் மாதிரி நட்டு வைத்து விட்டு பெண் பார்ப்பதும் அத்தனை சுலபமாயில்லை.

இவனுக்கென்று ஒருத்தி வேண்டும்... கறுப்போ, சிவப்போ-உயரமோ, பருமனோ ஒருத்தி வேண்டும்.

தனது அந்தஸ்துக்கு சமமான இடங்களில் பெண் தேடினால்தானே - அவமானச் சேற்றை அள்ளிப் பூசிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதிக வசதியில்லாத-ஏன் இரண்டு வேளைச் சோற்றுக்குக் கூட திண்டாடும் குடும்பத்திலிருந்து பெண் எடுத்தால் என்ன?

இந்த எண்ணம் தோன்றியதே பக்கத்து கிராமத்தில் குத்தகை வசூல் செய்யப் போனபோது குத்தகைக்காரனான ராமுவின் வீட்டு வாசலை மிதித்த போதுதான்....



தெருவை அடைத்துக் கோலம்... கோலம் என்றால் நாலு புள்ளி வைத்தோ-அல்லது இரண்டு வெள்ளைக் கம்பிகளை இழுத்தோ அவசரமாய் முடித்து விட்ட கோலமில்லை...

திருமாலின் கருடசேர்வை... தத்ரூபமாய், மிக நேர்த்தியாய்....

ஒரு பக்கம் பாவாடை வீசுகிற-பதினாறு வயசுப் பெண் கோலத்தை முடித்துக் கொண்டிருக்க-நரசிம்மனின் வில் வண்டியின் சக்கரங்கள் கோலத்தின் ஒரு பகுதியை அழுந்த மிதித்தபடி நிற்க—

''கோலத்தை அழிச்சிட்டீங்க...''

அந்தப் பெண் சீதா கொஞ்சம் ஆத்திரமும் நிறைய படபடப்புமாய் சொன்னாள். தன் கோலம் கலையப் போவது தெரியாமல்.

## 2

குத்தகைப் பணத்தை, அப்புறம் வசூலிக்கலாமென்று தோன்றி விட்டது நரசிம்மனுக்கு....

ராமுவைப் பார்த்ததுமே முதலில் குதித்த கேள்வி இது தான்.

''ஆமா இந்தக் குட்டி யாரு?''

''எங்க அக்கா பொண்ணு. ஆறு மாசத்துக்கு முன்னாடி தான் அக்காவோட காரியம் எல்லாம் முடிஞ்சது. அத்திம்பேர் இதுக்காகவே காத்துண்டிருந்த மாதிரி, வேற கல்யாணம் பண்ணிண்டுட்டார். அந்த அல்மலப்புலதான் குத்தகைப் பணம்... ஆசுபத்திரியில பணத்தை தண்ணியா வாரியிறைச்சதுக்கு கண்ட பலன் அக்காவோடப் பொண்ணையும் என் குடிசைக்கு இழுத்துண்டு வந்ததுதான்....''

இதற்குள் விசாலி - ராமுவின் மனைவி - வாசலில் கோலத்தை சரி செய்து கொண்டிருந்த பெண்ணைப்

Vennila

பார்த்து பல்லைக் கடித்தபடி. ரகசியக் குரலில் பேசுவது போல நினைத்து—கரபுரவென வார்த்தைகளைக் கடித்து துப்பினாள்.

"போறும் அழகு பார்த்தது. உள்ளே வந்து தொலை.... இந்த காபியைக் கொண்டுபோய் பெரியவர் கிட்ட கொடு."

நரசிம்மன் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தார்.

படு லாவகமாய் இடுப்பில் தாய் மாமன் பெற்ற பத்து மாதக் குழந்தையை இடுக்கிக் கொண்டு, இன்னொரு கையில் காபி டபரா தம்ளருடன் வெளிப்பட்டாள், அவள்...

தேவர்களும், அசுரர்களுமாய் மந்தர மலையை கடைந்தபோது இப்படித்தான் அமுதக் கலசமெடுத்து மோகினி அவதாரத்தில் கண்ணபிரான் தோன்றியிருப்பாரோ... நரசிம்மனின் மனசு வேத காலத்துக்குப் போய், சடாரென திரும்புகிறது.

"குழந்தைய இறக்கி வச்சுட்டு சாருக்கு நமஸ்காரம் பண்ணு!"

ராமு இன்னும் நரசிம்மனைப் பார்த்த வித்தலில் இருந்து விடுபடவில்லை. அவனால் மட்டும் முடியுமானால் செத்துப் போன, தன் வம்சத்தையே கூப்பிட்டு-இவர் காலில் விழச் செய்திருப்பான்...

என்னதான் நரசிம்மன் நல்லவர் என்றாலும், பண விஷயத்தில் எவ்வளவு கறார் என்பது அவனுக்குத்தான் தெரியும்.

தன் முன் விழுந்து வணங்கிய சிறுமியின் முகத்திலிருந்து பார்வையை எடுக்காமலேயே கேட்கிறார் நரசிம்மன்

"பேரென்ன?"



"சீதா...."

"நல்ல பேரு. சீக்கிரம் கல்யாணமாகட்டும்."

சீதா—வெட்கப்படக் கூட இன்னும் கற்றுக் கொள்ளாத சீதா, சின்னப் புன்னகையுடன் மறுபடியும் குழந்தையை எடுத்து 'ணக்' கென இடுப்பில் வைத்துக் கொண்டு நகருகிறள்.

"என்ன ராமு...குழந்தை படிக்கிறாளா?"

"எங்கே? எட்டாவதோட சரி. அம்மா இருந்த வரைக்கும். ஒரே படுக்கை. அவளுக்கு செய்யவே. இவளுக்கு நேரம் சரியாப் போயிடுத்து. இங்கே என் பெண்டாட்டியும் பிரசவிச்சு, கைக் கொழந்தையோட வந்து அஞ்சாறு மாசமாறது – இவளைப் படிக்க வைக்கறதுங்கறது இப்ப முடியாது."

"அப்ப சட்டுபுட்டுன்னு கல்யாணத்தை முடிக்க வேண்டியதுதானே."

ராமு அவரைக் கீழ் பார்வை பார்த்தான்.

வயசானவர்களுக்கே இடக்கு அதிகம். அதுவும் வசதியான வயசானவர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

பின்னே என்ன?....

இங்க இரண்டு நபர்களுக்கு மேல் மூன்றாவதாய் ஒரு பெண் வந்து சேர்ந்ததால்- அரிசியை எண்ணிப் போட்டு வடிக்க வேண்டியிருக்கிறது. இந்த லட்சணத்தில் கல்யாணத்துக்கு என்ன செய்ய முடியுமாம்?

"அக்காவோட— சொத்தா. இவளுக்கு இருக்கறது அழகும், கை நிறைய வேலையும் தான். ஒரு சிகப்புக்கல் தோடு இருக்கு. இதைத் தவிர தாரை வார்க்க புழக்கடையில ஓடற காவேரி ஜலம்தான் இருக்கு. இதை வச்சுண்டு, நான் எங்கே போய் மாப்பிள்ளை தேட?"

Vennila

"எங்கேயும் போக வேண்டாம். அவனை, நான் என்னோட ரெண்டாவது நாட்டுப் பொண்ணா நினைச் சுட்டேன். இது சுக்ல பட்சமில்லையா...? வர்ற வெள்ளிக் கிழமை நிச்சயதார்த்தம். யார் யாருக்கு சொல்லணுமோ சொல்லிடு. என்ன பார்க்கறே?"

ராமு நெஞ்சை பிடித்துக் கொண்டு நின்றான். விசாலி, வெட்கத்தை விட்டு, தடுக்கி விழாத குறையாய்-வாசற் படியைத் தாண்டி வந்து, கணவனின் பக்கத்தில் நிற்கிறாள்.

ராமு பதிலே சொல்லாதது நரசிம்மனுக்கு உறுத்தியது.

"என்ன...பேச்சு மூச்சைக் காணும்? இஷ்டமில்லை யின்னா சொல்லிடலாமே!"

"எனக்கு நீங்க என்ன சொல்றேன்னே புரியலை. ரெண்டாவது பையன்னா...ராகவனுக்கா?"

விசாலிக்கு கணவன் அனாவசியமாய் கேள்வி கேட் பதாய் தோன்றியது.

"ரெண்டாவது பையன் என்ன — இவருக்கே பொண்ணைத் தரச் சொன்னாலும் ஏன், எதுக்குன்னு கேட்காம சரியின்னு சொல்ல வேண்டியதுதானே...ஐயோ, நல்ல மனுஷன் எனக்கு அகமுடையானா வந்துவாய்ச்சான். தனக்காகவும் தெரியாது, மத்தவங்க சொல்லித் தந்தாலும் வராதே!"

அவள் கணவனை எரித்து பஸ்பமாக்கி விடாத குறை யாகப் பார்த்துச் சொல்கிறாள்.

"பெரியவர் சொல்றா, வயித்துலப் பாலை வார்த்தாப்பல இருக்கு. குழந்தைக்கு எத்தனைப் பெரிய அதிர்ஷ்டம்...வாங்கோ, ரெண்டு பேருமா விழுந்து நமஸ்காரம் பண்ணலாம்."

நரசிம்மன் விசாலியைப் பார்த்து புன்னகைத்தார்.



இவள் புத்திசாலி.

புத்திசாலி மட்டுமில்லை. தன் கையில் உள்ள நன்மையை இறக்கி வைக்க எப்பொழுதும் தயாராக இருக் கிறாள். இது போதாதா அவருக்கு.

அதற்கு மேல் அங்கே உட்கார்ந்து, தன் கௌரவத்தை சிதைத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை. காலில் விழுந்த தம்பதியரை, கம்பீரமாய் வாழ்த்தியபடி எழுந்து விட்டார்.

'தீர்க்காயுசோட, தீர்க்கசுமங்கலியா இருக்கணும். ராமு மேல் கொண்டு நடக்க வேண்டியதுக்கெல்லாம் நீ ஒரு நடவை என்னை வந்து பாரேன்.'

"ஆகா வர்றோம்."

—இது விசாலி. ராமுவுக்கு இன்னமும் திகைப்பு நீங்க வில்லை. பெரியவரின் பின்னாலேயே வாசல் வரையில் வந்து வழி அனுப்பினர் இருவரும்.

திண்ணையில் குழந்தை சின்னக் கண்ணனுக்கு வேடிக்கைக் காட்டியபடி உட்கார்ந்திருந்த சீதாவைக் கண்டதும் முகமலரக் கூறினார் நரசிம்மன்.

"கருட சேர்வை நன்னாயிருக்கு குழந்தை...எந்தப் படத்தைப் பார்த்து வரைஞ்சே?"

"படமா? எங்க ஊர்லே ஸ்வாமி வாசலிலே வரும் பார்த்துண்டே இருக்கலாம்."

"பேஷ் பேஷ் நாளைக்கு என்ன கோலம்?"

"இன்னும் யோசிக்கலே..."

"நாளைக்கு சீதா கல்யாணம் போடு. என்ன, நான் வரட்டுமா?"

"உம்... கோலத்தை மிதிக்காதீங்கோ..." -தான் இப்படிச் சொன்னதற்காக, தன் மாமி எதற்காக தன் இடுப் பில் கிள்ளுகிறாள் என்று புரியவில்லை அந்தச் சிறுமிக்கு. வலியில் முகம் சிணுங்கினாள்.

Vennila

அன்றிரவு முழுக்க, ராமுவுக்கும் விசாலிக்கும் சண்டையாவது சண்டை.

சீதா சின்னவளாக இருந்தாலும், இந்த வயசுக்கேர அவளுக்கு இங்கிதம் அதிகம். வந்த புதிதில்-அம்மா போன துக்கத்தில்-தனியே இருக்க முடியாமல்-தாய்மாமனும், மாமியும் உட்கார்ந்து பேசும் இடத்தில் வந்து உட்கார்ந்து விடுவாள். அப்பொழுதெல்லாம் விசாலி, சிடுசிடுவென முகத்தை வைத்தபடி அவளை விரட்டுவாள்.

"இந்தா இங்கே என்ன கதையாப் பேசிண்டிருக்கோம்' அப்படி தாழ்வாரத்துலப் போய் உட்காரேன்"

"பயமாயிருக்கு மாமி..."

"பயம் என்ன பயம்? எந்த பூச்சாண்டி கொண்டு போயிடுவான்? போய் குழந்தையத் தூங்கப் பண்ணு! ராம ராமான்னு மனசுக்குள்ளே சொல்லு. பயம் போயிடும்."

என்னதான் வசதியில்லாவிட்டாலும், தமக்கையின் அருமைப் புதல்வியை, அத்தனைக் கடுமையாய் கோபித்துக் கொள்ள ராமுவுக்கு மனசு இடம் தராது.

"குழந்தை தானேடி அவளும்...! அவ இருந்தா உன்னை என்ன செய்யறது" - இப்படி ரகசியமாய் மனைவியை அதட்டியிருக்கிறான்.

தன்னால் கணவன்-மனைவியிடையே சச்சரவு வருவது அந்தப் பெண்ணுக்குப் புரிந்து போய் விட்டது. இப்போதெல்லாம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தால், குழந்தையைத் தூக்கிக் கொண்டு வாசல் திண்ணைக்குப் போய் விடுவாள். அக்கம் பக்கத்து குழந்தைகள் எல்லாம் இவள் தலையைக் கண்டதும் சிலேட்டும் கையுமாய் ஓடி வரும்.

"அடி சீதா... எனக்கு ஒரு படம் போட்டுத் தாடி..."

"எனக்குத்தான் முதல்லே."

"எனக்கு சிப்பாய் படம்"



"ஹூவே— எனக்கு முருகன் படம்..."

நடுநடுவே பெரியவர்களும் இந்த குழந்தைகளுடன் போட்டி போடுவார்கள்.

"அம்மா சீதா! எனக்கு ஒரு வரலட்சுமி படம் [illegible]திலே எழுதிக்கொடேன். ஒவ்வொரு வரலட்சுமி விரதத்தும் போதும் உன்னை நினைச்சுப்பேன்."

"இந்தப் பயலுக்கு நாளைக்கு சயின்ஸ் ரிக்கார்டு நோட்டை டச்சர் கிட்ட கொடுக்கணுமாம்... இன்னும் ஒரு படம் கூட சரியாப் போடலை... கொஞ்சம் பார்த்து வரைஞ்சு கொடுத்துடேன்."

இப்பொழுது அவளுக்கு தனிமை பயமில்லை. எப்பொழுதாவது ஆழ்ந்த தூக்கத்தினிடையே, அம்மாவின் முகம் வந்து போகும்...

"அந்த மருந்தை எடுத்துத் தாடி என் கண்ணே..."

"ஹுவோ... தலை என்ன இப்படி கோரைப் புல்லாக் கிடக்கு... ஒரு கை எண்ணெய் கிடையாதா இந்த வீட்டுலே..."

"கிட்ட வந்து படு. வயசாச்சே தவிர தனி [illegible] தூங்கத் தெரியலையே...! நான் இல்லைன்னா என்னதான் பண்ணுவியோ?"

அம்மாவின் குரல் எங்கேயோ டெண்ட் கொட்டகையிலிருந்து வரும் சினிமா வசனம் போல அவளது தூக்கத்தைக் கலைத்துச் செல்லும்... இப்பொழுது கூட அவள், உள்ளே நடக்கும் சண்டையில் கொஞ்சமும் லயிக்காமல், வாசலில்-குழந்தைகளுடன் தன் கதியில் இயங்கிக் கொண்டுதானிருக்கிறாள்.

விசாலி, கணவனின் முகவாயில் இடிக்காத குறையாய் சொல்லிக் கொண்டிருந்தாள்.



Vennila

''ஜெயிலுக்குப் போனா என்ன? இப்பத் திரும்பி வந்து சாமின்னும் பூஜையின்னும் பக்தி சிரத்தையாத்தானே இருக்கான்? இதைவிட நல்ல இடம் உங்க மருமகனுக்கு கிடைக்கும்னு கனா கூடக் காண வேண்டாம்.''

''இல்லை விசாலி, நாளைக்கு ஊர் என்ன சொல்லும்? பணத்துக்கு ஆசைப்பட்டு, தாயில்லாப் பொண்ணை ஒரு கொலைகாரனுக்கு- இல்லே ஒரு சாமியாருக்கு பண்ணி வச்சிட்டாத்தானே சொல்லும்?''

''போறும் வாயை மூடுங்கோ? இந்த ஊரா சோறு போடறது? நரசிம்மன் சோறு போடறார். பொங்கல், தீபாவளி தவறாம புதுசு எடுத்துக் கொடுக்கறார். இன்னும் இந்தக் கல்யாணம் மட்டும் முடிஞ்சுதுன்னா நாம ஒருத்தருக்கு கை கட்டி சேவகம் பண்ண வேண்டாம்.''

''அது சரி சரக்கு சரியில்லையே விசாலி... மேலும் அவன் வயசு என்ன தெரியுமோ, முப்பதுக்கு மேல... சீதாவுக்கு இன்னும் பதினாறே முடியலை. பதினஞ்சு வயசு வித்தியாசம்.''

''ஆகா, உங்க அக்கா பொண்ணு பாவைதான். நான் இல்லையின்னு சொல்லலை... இருபது, இருபத்திரண்டு வயசுல வரன் பாருங்கோ. உங்க அக்கா இங்கே பொண்ணு கல்யாணத்துக்காக லட்சம் லட்சமா வச்சிட்டுப் போயிருக்கா இல்லையா... தாராளமாப் பாருங்கோ. நான் இப்பவே கிளம்பி எங்க அம்மா கிட்ட போறேன்.''

''இதுக்காக நீ ஏண்டி கிளம்பறே?''

''பின்னே என்ன? அசடா இருந்தா சொல்லிக் கொடுக்கலாம். வேணும்னு அசடு வேஷம் போடற மனுஷனுக்கு என்னத்தை சொல்றது! ஏதாவது சொன்னா குதர்க்கமாப் பேசுவேன். பெண்டாட்டி பிள்ளை பெத்து வந்து ஏழு மாசமாறது. இன்னும் 'என்னடி'யின்னு பிரியமா ஒரு வார்த்தை இல்லை, கை மேலப் பட்டாக் கூட-சீதா



கவனிச்சிட்டுப் போறான்னு அவரா அவசரமா எழுந்து ஓடறேன்.

தக்கதுன்னு ஒரு அந்தரங்கம் கிடையாது. தொம்பன் கூத்தாடும் மாதிரி- நடுக் கூடத்துலப் படுத்து—இன்னும் எத்தனை நாளைக்கு இந்த அவஸ்தை...? நீங்களாப் புரிஞ்சுக்கற மாதிரி காணும், எழவு, எல்லாத்தையும் நான சொல்லித் தர வேண்டியிருக்கு.''

கடைசியாய் பிரயோகித்த அஸ்திரம்தான் வேலை செய்தது.

மறுநாளே-ஒரு சீப்புவாழைப்பழத்தை வாங்கிக் கொண்டு, நரசிம்மனைப் போய் பார்த்து விட்டு வந்தான்.

நரசிம்மனும் சும்மாயில்லை...பெரிய மருமகள், அவர்களது அந்தஸ்துக்கு ஏற்ப, உடம்பு முழுக்க தங்க கவசமிட்டுத்து சாற்றி கொள்ளாத குறையாகத்தான் வந்திருந்தாள்.

வீட்டிலுள்ள மூன்று பெண்களும்-சேர்த்தாப் போல இரண்டு வார்த்தை பேச வேண்டுமானால் எதிராளிடம் குறைந்த பட்சம் வைரத்தோடும் முப்பது பவுனுமாவது இருக்க வேண்டும் என்று பார்க்கிறவர்கள்.

நரசிம்மன் அவனை சகல அலங்காரத்துடன் தன் வீட்டுக்கு மருமகனாய் அழைக்கத் தீர்மானித்து விட்டார். வெள்ளியும், காசு மாலையும் காரில் அந்த குக்கிராமத்தில் உள்ள சீதாவைத் தேடி வந்தது. பெட்டி பெட்டியாய் பட்டுப் புடவைகள். இன்னும் சீதா நினைத்தே பார்த்திராத ஆபரணங்கள்.

இவைகளைக் - கொடுக்கும் சாக்கில், அந்தக் குடும்பத்துப் பெண்கள் சீதாவை வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

பெரியவள் பார்வதி, முற்றத்தில் அமர்ந்து தன் காலடியில் அமர்ந்து, காபி ஆற்றிக் கொண்டிருக்கும் கணவனைப் பார்த்து நட்டாங்கு அடித்தாள்.

Vennila

"ஆனாலும் அப்பாவுக்கு புத்தி இப்படிப் போக வேண்டாம்.''

"ஏன்?"

"பொண்ணு சேப்புத் தோலோட, மூக்கும் முழியுமா இருந்தாப்பல ஆச்சா... தங்கப் பொட்டு நகை கிடையாது. அபிஷேக நாச்சியார் மாதிரி நிற்கறது. நாம கொடுத்து தான் விடியணும்."

இதே சமயத்தில் இரண்டாவதுப் பெண் ஜனகம், தன் பத்து வயது மகனின் கொத்துமல்லிக் கட்டு முடியை, இழுத்து ரப்பர் வளையத்தினால் கட்டிக் கொண்டே, தனக்கு அடுத்தவனான சிவகாமுவிடம் ஆத்திரத்துடன் சொல்கிறாள்.

"செக்குல ஆட்டின தேங்கா எண்ணெய் 'நடுவுல அப்பாவுக்குத் தெரியாம முட்டையை வாங்கி தலையில தேய்ச்சு குளிப்பாட்டியாறது... அங்கே பார்த்தியா அவ பின்னலை. அது என்னடிம்மா, குதி காலை வந்து இடிக்கிற மாதிரி அப்படியொரு பின்னலை நான் பார்த்ததே இல்லை. அடர்த்தியும் கைப்பிடிக்குள் அடங்காது போல இருக்கே!"

"உக்கும்... அத்தனையும் கோரை மயிர் பறட்டை பறக்கடிக்கும் கோரை குடியைக் கெடுக்கும்னு பெரியவங்க சொல்லிக் கேட்டது இல்லையா?"

இதே நேரத்தில் மூத்தவன் சீனுவின் மனைவியான லட்சுமி, கணவனிடம் அழுத்தமாய் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"அநாவசியமா ஒரு பொண் பாவத்தை கொட்டிக்கறார் உங்க அப்பா."

"நகை நட்டோட, வைப்பட்ட சீரோட புகுந்த வீடே ஆரத்தி கரைச்சு வரவேற்கறதே. சுசக்குமா ஒருத்திக்கு?"



"எனக்கு என்னமோ சுரந்துடும்னுதான் தோணறது. உங்க தம்பி - பழைய குணத்தோட போகியா இருந்தாலும், இந்தச் சின்னப் பொண்ணால அதுக்கு ஏத்தாப்பல ஈடு கொடுக்க முடியாது. யோகியா இருந்தாலும்— வாழ வேண்டிய ஒருத்தியோட வாழ்க்கை வீணாப் போகப் போறது..."

இதை எதையுமே லட்சியம் செய்யாதவனாய்-ராகவன் அம்பாளுக்கு கற்பூரம் காட்டிக் கொண்டிருந்தான்.

## 3

ராகவன் அம்பாளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆடுகிற ஆட்டமெல்லாம் ஆடி விட்டு, கடைசியில் அம்பிகையைச் சரணடைந்திருப்பதன் ரகசியம் அவனுக்கும் அந்தக் கடவுளுக்கும் மட்டும் தான் தெரியும்.

'தெய்வம் நின்று கொல்லும்' என்பது, அவன் விஷயத்தில் சரியாகத்தான் போய் விட்டது.

பார்த்த பெண்களிடம் எல்லாம் வம்புக்கு போனவனுக்கு- இப்பொழுது பெண்ணைப் பார்த்தாலே உடம்பு 'தண்'ணென்று குளிர்ந்து போய் விடுகிறது- ஐம்புலன்களும் ஓய்ந்து போகிறது...

தன் நிலை உணர்ந்து, அவன் கோவில் என்றும், பூஜை என்றும் மனதை திருப்ப முயற்சிக்கையில்- 'இந்தா பிடித்துக்கொள்' என்கிறாற் போல அவன் கரத்தில் பொம்மையைத் திணிப்பது போல சீதாவை திணித்து விட்டார்கள்.

'இவனுக்கு கொடுக்க என்னிடம் என்ன இருக்கு?' அவன், பூஜை மண்டபத்தில் கொலுவிருக்கும் அம்மனையே மானசீகமாய் கேட்டபடி அமர்ந்திருக்கிறான்.

Vennila

இரவு நடக்கப் போகும் வைபவத்துக்காக ராகவனின் அறையை, பத்து பேர் கூடி அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள்.

தஞ்சாவூரிலிருந்து பிரசித்தி பெற்ற பூ ஜோடனைக்காரர்கள் வந்து ராகவனின் இரட்டைக் கட்டிலை அன்னப் பட்சி மாதிரி அலங்கரிக்க... மல்லிகையும் ரோஜாவும், கதிர் பச்சையுமாய் 'கும்'மென அந்த அறையையே ஒரு நந்த வனமாக்கிக் காட்ட....

நரசிம்மன் இடுப்பில் கை வைத்தபடியே இவர்களை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருக்க...

அவர் முகத்தில் விவரிக்க முடியாத பெருமிதம். தன் மகனுக்காக எத்தனை பேரிடம் கவுரவத்தை மறந்து பெண் கேட்டு, நெஞ்சில் அடிபட்டிருக்கிறார் அவர்?

கேட்கக் கூடாது - கேட்கக் கூடாது என்று தன்னைத் தானே கட்டுப்படுத்தி கடைசியில் அவமானம் இதயத்தை நெருப்பாய் சுட - அவர் ஒவ்வொருவரிடமும் பெண் கேட்டு... அப்பப்பா.

இதோ இரவு விருந்துக்காக சமையற்காரரிடம் நீளமாய் பட்டியல் போட்டுக்கொண்டிருக்கிறாரே— மூத்த பிள்ளை கிருஷ்ணன்.. இவரது அக்கா மகளை கேட்கவில்லையா?

இல்லை இரண்டாவது மருமகன் ஜனார்த்தனத்தின் அண்ணன் மகனைத்தான் கேட்கவில்லையா?

ஏன், மூத்த மருமகள் லட்சுமியின் தங்கையைக் கூட கேட்டாரே...

"நீங்க கேட்டதனால நானும் எங்க அக்காவைக் கேட்டேன்தான் மாமா. அவ, தன் பொண்ணை ஃபாரினுக்கு அனுப்பி, படிக்க வைக்கப் போறாளாம்!'

"எங்க அண்ணா, வடக்கேயே இருக்கான் இல்லையா ...! அந்தப் பொண்ணுக்கு, துளி கூட நம்ம பழக்க வழக்



கம், சம்பிரதாயங்கள் எல்லாம் தெரியவே இல்லை. எப்பப் பாரு- ஆம்பிளை மாதிரி பேண்ட், ஷர்ட்தான். நம்ம குடும்பத்துக்கு ஒத்து வராது..''

''அக்கா தங்கை - அண்ணன் தம்பியைக் கல்யாணம் பண்ணிக்கிறது அத்தனை சிலாக்கியமில்லைன்னு எங்க அப்பா அபிப்ராயப்படறார்.''

- இப்படி எத்தனைச் சமாதானங்கள். எத்தனைப் பூசி மெழுகல்... இன்று அத்தனை பேர் முகத்திலும் கரியை வாரிப் பூசுவது போல அழகான, வயசில் மிகச் சிறிய மீனாட்சி விக்கிரகம் போன்ற ஒரு பெண்ணைத் தேடிப் பிடித்து விட்ட பெருமிதம் அவர் முகத்தில் ஜொலித்தது.

"ஊதுவத்தி என்னடா வாசனையையே காணும்?"

'நல்ல மட்டிப்பால் வத்தின்னு சொன்னானே அப்பா...''

''போடா அவன் சொன்னானாம். இவன் வாங்கிண்டு வந்தானாம். போய் தாழம்பூ, ரோஜா வந்தின்னு கேட்டு வாங்கிண்டு வா...''

''ஆகட்டும்பா...''

''அங்கே என்ன தகராறு?''

''ஒண்ணுமில்லே. நான் பால் பாயசம் வச்சிடுங்கோன்னுருக் கிட்ட சொல்லியிருக்கேன். பார்வதி சேமியா பாயசம் போதும்னு சொல்லியிருக்கா...',

''அல்பம்... அல்பம்... பாதாம் கீரா பண்ணச் சொல்லுங்கோ. இது நம்ம வீட்டுக் கல்யாணம். இத்தனை செலவழிக்கிறோம். பாயசத்துலப் போய்தானா கணக்குப் பார்க்கணும்?''

ஒரு முதலிரவுக்குப் போய் இவர் இத்தனை அமர்க்களம் செய்ய வேண்டாம்தான். ராகவன்—பார்க்காத இரவா?

Vennila

ஒரு வேளை அத்தனை இரவுகளையும் அவனது ஞாபகத்திலிருந்து அழித்து விட வேண்டும் என்பதற்காகவே இப்படியொரு இரவுக்கு ஏற்பாடு செய்தாரோ என்னவோ?

விசாலி, நரசிம்மன் சீதாவுக்காக கொடுத்த ஒவ்வொரு நகையையும் பெருமூச்சுடன் கையிலெடுத்து அழகு பார்த்து, சீதாவுக்கு அணிவிக்கிறாள்.

"எங்கேயோ பொறந்தாலும் குட்டி நன்னாத்தான் இருக்கா..." பார்வதி, தனக்குள் முனகுகிறாள்.

விசாலி, சீதாவின் நெற்றியில் திலகமிட்டபடியே காதோடு சொன்னாள்.

"சீதா, அகமுடையான் மனசு கோணாம நடந்துக்கோடி."

"ஆகட்டும் மாமி."

"அவர் என்ன சொன்னாலும் 'ஆகா சரி'ன்னு சொல்லு. ஆம்பிளைங்களுக்கு கோபம் வந்தா, சமாளிக்கறது ரொம்பக் கஷ்டம்டி பொண்ணே!"

"அது சரி. அவருக்கு எப்ப கோபம் வரும்னே தெரியாதே மாமி"

"அதெல்லாம் பழகப் பழகத் தானே தெரிஞ்சிடும் சீதா. இனிமே அவருக்கு நீயே சாதம் பரிமாறணும். அவருக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு தெரிஞ்சு வச்சிக்கணும். இதோ பாரு, இன்னும் சித்த நேரத்துல உன்னை, அந்த அறையிலக் கொண்டு போய் விடுவோம். போன உடனே, மறக்காம கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கோ. அவருக்கு முதல்லே நமஸ்காரம் பண்ணு— இதற்கு மேல் இந்த சிறு பெண்ணிடம் எப்படி சொல்வது என்பது போலத் தடுமாறினாள் விசாலி.

எப்படிச் சொல்வது?

"சீதா உனக்கு நளாயினி, அனசூயை, அருந்ததி கதையெல்லாம் தெரியுமோல்லியோ!"



"ஓ..."

"அவா மாதிரி, அகமுடையானை தெய்வமா மதிக்கக் கத்துக்கணும் நீ..."

விசாலி இப்படிச் சொன்ன போது சீதாவுக்கு அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்தது.

"மாமி நன்னாத்தான் பேசறா, ஆனா மாமா கிட்ட இது மாதிரி ஒரு நாள் கூட அவ நடந்துண்டதில்லையே..." சீதாவிற்கு பயம். வாய் விட்டுச் சிரித்தால் மாமி திட்டுவாளோ என்கிற பயம்.

தலையில் ராக்கொடியும், நெற்றிச் சுட்டியும் சேர்ந்து அவளை நிமிர விடாமல் செய்தது. பட்டுப் புடவையின் கனம் அவளது கால்களைப் பின்னி தடுக்கிறது. ஆனால், அவளது தடுமாற்றத்தை பெண்கள் வேறு விதமாய் அர்த்தம் பண்ணிக்கொண்டும் சிரித்தார்கள்.

நரசிம்மன், எதையும் சாஸ்திர சம்பிரதாயங்களின்படி செய்ய விரும்புபவர்.

"ராகவா... நீ, வைதீகர் சொல்ற மந்திரத்தைத் திருப்பிச் சொல்லணும்."

மகனிடம் முன் கூட்டியே சொல்லி வைத்தார். அவர் பயம் அவருக்கு. என்னதான் ராகவன், அப்பாவின் விருப்பப்படி எல்லாம் வளைந்து கொடுத்தாலும், 'இந்த சடங்கெல்லாம் எதற்கு?' -என்று சொல்லி விடுவானோ என்கிற பயம்.

ஏனெனில், மூத்தவன் சீனுவாசன் இதற்கெல்லாம் ஒத்துக்கொள்ளவில்லை. திருமணமான அடுத்த நாளே தேனிலவுக்கு கிளம்பி விட்டான்.

ராகவன்...

இதைப் பற்றி என்ன நினைத்தான்?

Vennila

விளியாவினியும், சரஸ்வதியும் வசிக்கும் உன்னிடம் அஸ்வினி தேவர்கள் கருவை உண்டு பண்ணட்டும்; அவர் களைப் போல அழகான குழந்தை உண்டாகட்டும்; பூமி, மறையில் பரீட்சை உண்டு பண்ணுவது போல நீ நற் குழந்தைகளைப் பெறு; 'தேஜ மேஷ' என்னும் திருஷமேஷக்குழந்தையோடு வா, நீ இவனை விட்டு விலகு; இங்கு நீ வர விரும்பினால் புருஷக்குழந்தையோடு வா, மனைவியே நீ உத்தமியாக இரு; சரமானது பாணப்பெட்டியில் புகுவது போல சிசு, உன் கருவில் நுழையட்டும்' -இப்படிப்பட்ட மந்திரங்களைச் சொல்லி...''

''ஐயோ இதையெல்லாம் நான் ஏன் சொன்னேன்? என்னால இவளோட சம்சாரம் நடத்த முடியுமா?''

எப்படி முடியும்? என் பலமெல்லாம் தங்கமணியோடப் போயிடுத்தே.

—அவன் செய்வதறியாது தவிக்கிறான்.

உறவினர் இவர்களைத் தனியே விட்டு, படுக்கை யறைக்கதவை 'படக்'கெனத் தாழிட்டு விட்டு நகர...

சீதாவுக்கு மாமி சொல்லிக் கொடுத்த உபதேசங்கள் அத்தனையும் மறந்து போயிற்று.

'எதை முன்னால் செய்யணும்... ரூம் கதவைத் தாழ்ப்பா போட்டுட்டு இவரை நமஸ்காரம் பண்ணனுமா இல்லே, நமஸ்காரத்தைப் பண்ணிட்டு கதவை தாழி டலாமா?'

'இது என்ன சங்கடம்?'—அவள், அரக்காய் சிவத்திருந்த, மருதோன்றி மெருகேறிய விரல்களைப் பிசைய...

ராகவன், எழுந்து போய் அறைக் கதவைத் தாழிட்டான். இந்த சத்தத்துக்காகவே காத்திருந்தாற் போல, வெளியே கலீரிட்ட சிரிப்பு... கூடவே எக்காளமிட்டு வந்த பாட்டு...



தன் பக்கத்தில், இந்து முகமும் ஏற்றி வைத்த குத்து விளக்கு போல அமர்ந்திருந்த சீதாவை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு, தலை குனிந்தான்.

''உம்... உம்... நேரமாச்சு. பெரியவாளுக்கு நமஸ் காரம் பண்ணுங்கோ. ராகவா, உன் தர்மபத்தினிய ஒரு கையாலே அணைச்சு, உன்னோட வலது கையாலே அவ நாபியத் தொட்ட மாதிரி வச்சுக்கோ. இந்த மந்திரத்தைச் சொல்லு.''

வைதீகர் மந்திரத்தை ஓத—

ராகவனின் தலைக்குள் மத்தாப்பூ வெளிச்சமாய்— மந்திரத்தின் அர்த்தம் பிரகாசித்தது. அவனைத் திக்கு முக்காட வைக்கிறது.

''ஆ... எப்பேர்ப்பட்ட அர்த்தமுள்ள மந்திரம்... இதை நான் சொல்லலாமோ... எனக்கு என்ன தகுதி இருக்கு!''

''என் பக்கத்துல உட்கார்ந்திருக்கிற இவ, எனக்கு போதையைக் கொடுக்கலையே... இவளை ஸ்பரிசிக்கறப்ப எந்த ஒரு கிளுகிளுப்பும் உண்டாகலையே!''

'பூஜையறையிலே சந்தன மண்டபத்துல இருக்கிற அம்பாளை, பாலாலே அபிஷேகம் பண்ணி, பட்டாலே துடைக்கிறப்ப, தப்பித் தவறி அவ திருமேனியில என் விரல் பட்டுட்டா-ஒருவித பயம் கலந்த விதிர் விதிர்ப்பு ஏற்படுமே அதே மாதிரியின்னா இப்பவும் இருக்கு.'

'இவளுக்கு இந்த மந்திரத்தோட அர்த்தம் தெரியுமோ தெரிஞ்சிருக்க முடியாது. குழந்தை இவ கண்ணுலே விளையாட்டு சுபாவம் இன்னும் இருக்கு. இவ கிட்டப் போய் 'விஷ்ணு உன்னை கர்ப்பா ஸ்தானத்துக்கு ஏற்றவளாச் செய்யட்டும்; பிரம்மா என் மூலமா ரேதஸ்ஸை விடட்டும். 'தாதா' அதைக் கருவாக்கட்டும்; 'த்வஷ்யா' அவயவங்களைச் செய்யட்டும்.

Vennila

"பஞ்சவர்ணக் கிளி ஒன்னை
பஞ்சணையில் விட்டோமடி !
கொஞ்சத் தெரியுமோடி.... மாப்பிள்ளைக்கு
கெஞ்சத் தெரியுமோடி....

பட்சணமும், பால் பழமும்
பக்கத்திலே வச்சிருக்கு !
பட்சணத்தைத் தின்பாரோடி..... மாப்பிள்ளைதான்
பட்சமாய் இருப்பாரோடி?

கரத்தைத் தொட்டிழுத்தால்
கைவளையல் ஓசையிடும் !
காலைத் தொடச்சொல்லுடி.... மன்னவரை
கனிவாய் பேசச் சொல்லுடி...."

—குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்த சீதாவுக்கு, பாட்டின் அர்த்தம் புரிந்ததோ இல்லையோ- வயசானப் பெண்களின் கும்மாளம், சிரிப்பை உண்டு பண்ணுகிறது. சிரமப்பட்டு, தன்னை அடக்கிக் கொண்டாள்.

கட்டிலின் நடுவே அவள் உட்கார்ந்திருக்க, இரு கைகளையும் கட்டியபடி அவளையே சிறிது நேரம் உற்று பார்த்தபடி நின்றான். பிறகு மெதுவே அருகே வந்து, பக்கத்து மேஜை மீது தட்டில் வைக்கப்பட்டிருந்த ரோஜாப் பூ மாலைகளில் ஒன்றை எடுத்து அவள் கழுத்தில் போட்டான். சந்தனத்தை எடுத்து, அவள் கழுத்தில் பூசினான். குங்குமத்தை நுனி விரலால் தொட்டு அவளது பிறை நெற்றியில் தீட்டினான்.

அவள்—

மூச்சு விடக்கூடப் பயந்து போனவளாய் உட்கார்ந்து இருக்கிறாள்.

'ஐயோ! இது என்ன...'

அவள், தன்னை சுதாரித்துக் கொள்வதற்குள் அந்தக் காரியம் நடந்து விட்டது!



இத்தனையையும் செய்தவன்- படுக்கையில் தூவப் பட்டிருந்த மலர்களை அள்ளி, அவளது தலையில் தூவி, 'தடால்' என்று தரையில் விழுந்து வணங்கி விட்டான்!

அவள் பதறிப்போய் எழுந்து விட்டாள். என்னதான் ஒன்றுமே அறியாத சிறுமியானாலும் மனைவி காலில் கணவன் விழுந்து வணங்குவதில் ஏதோ முரண்பாடு இருப்பது போல அவளுள் உறுத்துகிறது.

அவளுடைய அம்மா இருந்த வரைக்கும், தினமும் விடிகாலையில் குளித்து, பூஜை முடித்து அப்பாவின் காலில் விழுந்து வணங்குவதை அவள் பார்த்திருக்கிறாள்.

ஏன், விசாலி கூட அப்படித்தான். நாள் முழுக்க புருஷனுடன் சண்டை போட்டாலும், காலையில் எழுந்தவுடன் கணவன் காலைத் தொட்டு கும்பிடுவதுதான் வழக்கம். அப்படியிருக்க, இது என்ன புதுப்பழக்கம்?

"என்னம்மா, ஏன் எழுந்துட்டே.... பயந்துட்டியா?"

ராகவன், சற்று தள்ளி நின்றபடி கேட்க- அவள் இதற்கு என்ன பதிலளிப்பது என்றே புரியாமல் விழிக்கிறாள்.

"இங்கே பாரு— உன் பேரென்ன.. அதுக்குள்ள மறந்து போச்சு..."

"சீதா"

"நல்ல பெயர். உனக்கு இந்த ராத்திரியோட விசேஷம் என்னன்னு தெரியுமோ?"

அவள் குனிந்த தலை நிமிரவில்லை.

'தெரியாது என்று சொல்லலாமா?'

'அப்படிச் சொன்னால்- இது ஏதடா இது. மகா அசடா இருக்கும் போல இருக்கேன்று நினைப்பாரே..'

'தெரியும்னு தலையாட்டிட்டா என்ன?'

Vennila

அவள் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில் டீச்சர் கேட்கும் கேள்விகளுக்கு, 'எனக்குத் தெரியும் டீச்சர்', 'நான் சொல்றேன்' இப்படிக் கூறி, கையை உயர்த்திய படி தண்ணீர் பந்து போலக் குதிக்கும் மாணவிகளை டீச்சர் லட்சியம் செய்யவே மாட்டார். எங்கோ ஒரு மூலையில்-எங்கே டீச்சர்-தன்னைக் கேட்டு விடுவாரோ என்று பயந்து, தலையை உள்ளுக்கு இழுத்துக் கொள்ளும் மாணவியைத்தான் தேடிப் பிடித்து டீச்சர் கேட்பார்.

இதற்காகவே பதில் தெரியாத சிறுமிகளும் 'உஸ்... உஸ்... ஐயோ எனக்குத் தெரியும்'—என்று கைகளை உதறுவதுண்டு.

அதெல்லாம்தான் இப்பொழுது நினைவுக்கு வந்தது அவளுக்கு. தெரியும்னா என்ன தெரியும்னு கேட்பாரோ...

ராகவன் அவளையே பரிவோடு பார்க்கிறான்.

"உன்னை எதுக்காக இந்த ரூம்லே கொண்டு வந்து விட்டிருக்கா?"

"உங்...உங்களோடப் படுத்துக்க—"

"படுத்து...?"

இது என்ன அசட்டு கேள்வி? படுப்பது எதற்கு... தூங்கத்தானே...இது கூடவா தெரியாது ஒரு மனுஷருக்கு?

அவளுக்கு சிரிப்பாக வந்தாலும், அடக்கிக் கொண்டு, பதவிசாகப் பதிலளித்தாள்.

"படுத்துண்டு தூங்கணும். விடிகாலம்பற சீக்கிரமா எழுந்திருக்கணும். வாசல் தெளிச்சு கோலம் போட்டுட்டு, மன்னிக்கு, அக்காள்களுக்கு ஒத்தாசையா சமையல் காரியங்களை கவனிக்கணும். உங்க துணி மணிய துவைச்சு உலர்த்தணும். உம்— அப்புறம்... சாதம் போடணும்—"

இத்தனையையும் சொல்லி விட்டு, அதிகம் பேசி விட்டோமோ என்பது போல—அவள் தயங்க—



ராகவனின் இதழ்களில் விசாலமான புன்னகை.

"பரவாயில்லையே...எல்லாம் தெரிஞ்சு வச்சிட்டிருக்கியே. இதெல்லாம் உனக்கு யார் சொல்லிக் கொடுத்தா?"

"எங்க மாமி..."

"சரி நேரமாச்சு. நீ படுத்து தூங்கு. காலம்பற சீக்கிரமா எழுந்து வாசல் தெளிக்கணுமில்லே?"

"நீங்க?"

"நான் கொஞ்ச நேரம் புக் படிச்சுட்டு, தூக்கம் வர்றப்ப வந்து படுக்கறேன். பட்சணம், பால், பழம், ஏதாவது சாப்பிடறயா?"

"உங்களுக்கு"

"எனக்கு ராத்திரி வேளையில நிறைய சாப்பிட்டு பழக்கம் இல்லே. பகல் ஒரு வேளைதான் சாப்பிடுவேன். உனக்கு ஆசையா இருந்தா சாப்பிடு..."

"இல்லே எனக்கும் வேண்டாம்!"

"ஏன்...ஏன்...வேண்டாம்?"

"சும்மாத்தான் வேண்டாம். எங்க அம்மா கூட அப்பா சனிக்கிழமை கிருத்திகை விரதமிருந்தா தானும் ஒண்ணும் சாப்பிட மாட்டா. பட்சணமும் பழமும் காலம்பற சாப்பிட்டாப் போச்சு"

அன்றிரவு அவள் நிம்மதியாய் படுத்துத் தூங்கினாள்.

பின்வரப்போகும் இரவுகளில், தனது நித்திரை பறிபோகப் போவது அறிந்துதானோ என்னவோ, அன்று ஆனந்தமாய் தூங்கினாள்.

## 4

ஆரம்ப காலத்தில், அந்தக் குடும்பத்துடன் ஒட்டிக் கொள்ள ரொம்பவும் சிரமப்பட்டாள்தான் சீதா.

Vennila

செல்வத்தில் செழிக்கும் குடும்பம். செலவுகள் எதுவுமே இவள் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு. சிறு பெண்ணாதலால் இவளை எடுத்த எடுப்பில் சமையல் வேலைகளைக் கவனிக்க விடவில்லை பெரிய நாத்தி பார்வதி.

சின்னச் சின்ன எடுபிடி வேலைகளைச் செய்வாள். பெரிய ஓரகத்தி லட்சுமியிடம் தொடக்கத்திலிருந்தே பயம் அதிகம். இத்தனைக்கும் அவள் வாய் திறந்து ஒரு வார்த்தை இவளிடம் பேசினதில்லை. இருந்தாலும் ஒரு வித பயம்...

விடிகாலைப் பொழுதில் லட்சுமியும், பார்வதியும், ஜனகமும் சமையல் வேலைகளை கவனிப்பார்கள். கடைசிப் பெண் சிவகாமு- சமையலறைப் பக்கம் வரமாட்டாள். புருஷனுடன் விமானத்தில் பறப்பதும்- வீட்டில் தங்குகிற நாட்களில் எல்லாம் தான் பார்த்த வெளிநாடுகளைப் பற்றி கதைகதையாய் கூறவும்தான் அவளுக்கு நேரம் சரியாக இருக்கும்.

அந்த வீட்டில், நரசிம்மன் ஒரேயொரு சட்டத்தை மட்டும் மிகத் தீவிரமாய் கடைபிடித்து வந்தார். அது எத்தனை வசதியிருந்தாலும் குடும்பப் பெண்கள்தான் சமையலை கவனிக்க வேண்டுமென்பது.

ஏழெட்டு சமையற்காரர்களை ஒரே சமயத்தில் வைத்துக் கொள்ள வசதியிருந்தாலும்- சமையல் மட்டும் பெண்கள்- தங்கள் கைப்படச் செய்வதில்தான் நேர்த்தி அதிகம் என்பது அவர் அபிப்பிராயம்.

லட்சுமிக்கும், பார்வதிக்கும் இந்த விஷயத்தில் கழுத்து மட்டும் குறை. லட்சுமிக்கு-தன் புருஷன், குழந்தைகள், மாமனார் இவர்களுக்கு மட்டும் தான் சமைப்பதே பெரிய விஷயம் என்று கருதினாள்.



வீட்டோடு உட்கார்ந்திருக்கும் பெண்கள்- மாப்பிள்ளைகள்- இவர்களது குழந்தைகள்- இது போதாதென்று வேதபாடசாலைக் குழந்தைகளுக்கும் சேர்த்து வடித்துக் கொட்ட வேண்டும் என்பது என்ன தலையெழுத்து என்பது அவள் அபிப்பிராயம்.

பார்வதி-கிருஷ்ணன் தம்பதியருக்கு கல்யாணமாகி பத்து வருடங்களுக்கு மேலாகிறது. இருக்கிற விரதம்- ஹோமம் அத்தனையையும் செய்து பார்த்தாகி விட்டது. ஒரு பூச்சி, பொட்டு இல்லை. இனிமேல் பிறக்கும் என்கிற நம்பிக்கையும் இல்லை. இருவரிடமும் எந்தக் குறையும் இல்லை என்று இது நாள் வரையில் கூறி வந்த டாக்டர்கள்- இப்பொழுது பார்வதியைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார்கள்.

இப்படி பெருத்துக் கொண்டே போனால் என்ன செய்வது...?

பார்வதி ஒரு ஹெட் குக் மாதிரி கிராமத்து வீடானாலும், வசதிகள் மிகுந்த அந்த சமையலறையில் ஒரு ஸ்டூல் போட்டு சர்க்கஸ் யானை மாதிரி உட்கார்ந்து விடுவாள்.

அவள் உட்கார்ந்திருக்கும் நிலையிலிருந்தும் பார்த்தால் கூடம் தெரியும். பின்கட்டின் நிலைப்படி தாண்டி - மாட்டுக் கொட்டகையில் கட்டி உள்ள காராம்பசுவும் கன்றுக்குட்டியும் தெரியும்.

ஜனகம், லட்சுமியும் அவள் சொன்னபடி ஆட வேண்டும்.

“லட்சுமி... பூசணிக்காய் சாம்பார் பண்ணிடு”

“இந்தாடி ஜனகம்... ரசத்தை எத்தனை நேரம் கொதிக்க வைப்பே? கொத்தமல்லியக் கிள்ளிப் போட்டு இறக்கி வை...”



Vennila

"யாரு அங்கே... விசுவமா... மாட்டுக்குத் தீனி வைக்கலையா இன்னும்? கறக்கிறதுக்கு ஆள் வந்தாச்சா பாரு..."

"டேய் பசங்களா... அந்தப் பழைய சாதத்துல இந்த உப்பைப் போட்டு தயிரை விட்டுப் பிசையுங்கோ. இலைக் கிழிசலைக் கொண்டு வந்து போட்டுண்டு நீங்களா சாப்பிட்டுட்டுப் போக வேண்டியது தான். ஜாடியில மாவடு இருக்கு பாருங்கோ..."

நடுநடுவே தன் கணவன் கிருஷ்ணனையும் விரட்டுவாள்.

"என்ன அங்கே வேடிக்கை பார்த்தாறது? கோர்ட்டுக்கு போகணும், வக்கீலைப் பார்க்கணும்னு அப்பா நேத்தியிலிருந்தே சொல்லிண்டிருக்கார். கிழக்கேயும், மேற்கேயும், அப்புறம் பார்க்கலாம். முதல்லே குளிச்சுட்டு கிளம்புற வழியைப் பாருங்கோ!"

- இப்பொழுது பார்வதியின் சாம்ராஜ்ஜியத்துக்குள் இன்னொரு புது பிரஜை.

சீதாவின் நேர்த்தியான காரியங்கள் பார்வதிக்கு வியப்பாக இருந்தாலும் எதிலுமே குற்றம் கண்டு பிடித்து உறுக்குகிற அவளுக்கு-ஒரு விஷயம் கிடைத்து விட்டது.

அது-சீதா விடிகாலையில் எழுந்து கோலப் பொடியுடன் வாசலுக்கு போனால் சூரியன் எட்டிப் பார்க்கும் வரையில் போட்டுக் கொண்டிருப்பது தான்.

முதல் நாள் அவள் தவழும் கண்ணனை அப்படியே வாசலில் கொண்டு வந்திருந்தாள். தெருவே திரண்டு வந்து வேடிக்கை பார்த்தது. வேத பாடசாலைச் சிறுவர்களுக்கு பெருமை கலந்த சந்தோஷம்.

"டேய், புது மன்னி ரொம்ப நன்னா கோலம் போடறாடா"

"அது ஒண்ணும் கோலம் இல்லே...டிராயிங்..."



"எதுவோ ஒண்ணு. வாசலிலே போட்டா கோலம் தானே?"

காவேரிக் கரையில் பெண்கள் எல்லோரும் மஞ்சள் இழைப்பதையும் விட்டு, இதையே பேசினார்கள்.

"பெரிய பண்ணை வீட்டு வாசலைப் பார்த்தியா?"

"ஆகா... சித்திரவிசித்திரமா இருந்தது. சின்னப் பொண்ணு கையில எப்பேர்ப்பட்ட திறமை பாரு..."

"இது மாதிரி தினமும் இவ கோலம் போடுவாள்னு நீ நினைக்கறே?"

"ஏன் சரஸ்வதி மாதிரி ஒரு நாட்டுப் பொண் கிடைச்சிருக்கா நரசிம்மனுக்கு, ஏன் போட அனுமதிக்க மாட்டார்? கலர் பொடியே வாங்கித் தருவார்"

"நினைச்சிண்டிரு. பார்வதிக்கு- தன்னைத் தவிர அழகியும் உலகத்துல இல்லே. அறிவாளியும் இல்லேங்கற நினைப்பு அதிகம். அப்படியெல்லாம் தன் கைய மீறிப் போக விடமாட்டா. லகானை இழுத்துப் பிடிச்சிடுவா"

"என்னமோ அந்தப் பிள்ளைக்குப் போய் இப்படி ஒரு பொண்ணு வரவேண்டாம்"

"அவனுகென்ன தினமும் வீட்டுல மூணு வேளை பூஜை. முந்தா நாள்-பக்கத்து ஊர் பஞ்சாயத்து தலைவர்_ இந்த தடவை எலக்ஷனிலே தான் நிற்கலாமான்னு கேட்க இவனைத் தேடி வந்திருக்கார்னா பாரு..."

"இப்ப இதுல இறங்கிட்டானா..."

"இதப்பாரு, நமக்கு எதுவும் தெரியாமச் சொல்லக் கூடாது. அவர் வம்சத்துலேயே தலைமுறைக்கு ஒரு மகான் உண்டாம். இந்தத் தலைமுறை மகான் ராகவனா இருக்கலாம்னு மாமனார் சொன்னார்"

சீதாவுக்கு இந்தப் பேச்சுக்களையெல்லாம் கேட்கக் கூடிய சந்தர்ப்பம் இல்லை.

Vennila

அவர்கள் வீட்டில் தான் பக்கத்துக்குப் பக்கம்—குழாயில் காவேரி—இவர்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறாளே, குடம் தூக்கி, காவேரி தேடிப் போக வேண்டிய அவசியம் இல்லை.

முதல் நாள் கோலத்தை முடித்து, நின்று அழகு பார்த்து, நேரமாகி விட்டதை அப்பொழுதுதான் உணர்ந்து அவள் பதற்றத்துடன் வீட்டுக்குள் நுழையும் போதே—வாசல் ரேழியில் எதிர்பட்டவர் கிருஷ்ணன்தான்.

"ஓடி வந்த வேகத்தில் — அவர் மீது மோதாதது தான் குறை—

"அம்மாடி... நீங்களா... நான் பயந்தே போயிட்டேன்—"

"பயப்படும்படியாவா நான் இருக்கேன்?"

"இல்லே... நான் யாரோன்னு நினைச்சிட்டேன்"

"யாருன்னு நினைச்சே.. உம்? ராகவனை நினைச்சியோ... அவன்... பூஜையறையில இருக்கான். இரு இரு எங்கே ஓடறே— ராத்திரி ரொம்ப நேரம் ரூம்லே லைட் எரிஞ்சிண்டிருந்ததே—"

"அவர் படிச்சிண்டிருந்தார்?"

"எதை?"

சீதா கிருஷ்ணனின் விகண்டைப் பேச்சு புரியாமல் ஒரு கணம் தடுமாறி நின்றாள்.

"வாசல்லே கோலம் பிரமாதமா இருக்கே. தவழ்ற கிருஷ்ணனா?"

"உம்..."

"கிருஷ்ணன்னா ரொம்பப் பிடிக்குமோ?"

இதைக் கேட்கும்போது அவர் லேசாகக் கண்ணைச் சிமிட்டினார்.



சூதுவாதறியாத சீதா மெள்ளச் சிரித்தாள்.

"கிருஷ்ணன்னா யாருக்குத்தான் பிடிக்காது?"

"பலே...என் பேரு என்னன்னு தெரியுமோ உனக்கு?"

—அவள் அவரையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

"கிருஷ்ணன்தான். நீ என்ன பண்ணறே. இன்னிக்கு பூஜையறையிலே ராதாகிருஷ்ணன் படம் போடு. ராதா கிருஷ்ணன் படம் பார்த்திருக்கியோ?"

அவர் மறுபடியும் கண் சிமிட்ட. அவள் பின்னங்கால் பிடரியில் பட உள்ளே ஓடினாள்.

—விசாலிதான் அவளை தடுத்து நிறுத்தினாள்.

"என்னடீது, இந்த ஓட்டம் ஓடி வர்றே இது நம்ம வீடு இல்லே. புக்ககம். புது மனுஷா, என்னடாது பொண்ணை தாமரதண்டியா வளர்த்திருக்காளுன்னு என்னைஎல்லாரும் குறை சொல்லக்கூடாது."

"சரி மாமி."

"வாசல்லேயே இத்தனை நேரமாக்கினா எப்படி? மளமளன்னு சமையலறைக்கு ஓடு ..இதைச் செய்யட்டுமா, அதைச் செய்யட்டுமான்னு கைக்காரியத்தை இழுத்து வாங்கிச் செய்."

அன்றைக்கு விசாலியும் ராமுவும் கிளம்பி விட்டார்கள்.

நரசிம்மன், ராமுவிடம் குத்தகைக்கு விட்டிருந்த நிலத்தையும், அந்த ஊரிலேயே உள்ள தனது வீடுகளில் ஒன்றையும் ராமுவுக்கே பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டார்.

தவிர, கல்யாணத்துக்காக விசாலிக்கு சாண் அகலப் பட்டுப் புடவை, ராமுவுக்கு பட்டு வேஷ்டி, விரலுக்கு மோதிரம்-இத்தனையும் வேறு....

காலையிலிருந்து டெம்போவில் அரிசியும், பருப்பும், காய்கறிகளும், தெய்யும் பார்த்து பார்த்து ஏற்றியாகிறது.

Vennila

ராமு, தன் மனைவியிடம் ரகசியமாகக் கேட்டான்.

"விசாலி, சீதாவை விசாரிச்சயா?"

"என்னன்னு..."

"ராத்திரி சந்தோஷமா இருந்தாளான்னு..."

"இதையெல்லாம் போய் கேட்பாளாக்கும். நீங்க ஒரு அசடு..."

"அக்கா இருந்தா பொண்ணைக் கேட்காம இருப்பாளாடி? சீதா பாவம் குழந்தை..."

"எல்லாம் தானா சரியாப் போகும், இதெல்லாம் ஒரு பொண்ணுக்கு சொல்லியாத் தருவா? பார்த்துண்டே இருங்கோ... இன்னும் ஒரு வருஷத்துல கையில குழந்தையோட நிற்பா..."

விசாலி அவன் வாயை அடக்கி விட்டாள்.

மாமனையும் மாமியையும் விட்டுப் பிரிவதை விடவும், சின்னக் கண்ணனைப் பிரிவதுதான் சகிக்க முடியாத துக்கமாக இருக்கிறது அவளுக்கு.

"எங்கே போயிட்டோம்? தோ, நாலு ஸ்டேஷன் தள்ளி இருக்கு நம்ம ஊர். அடிக்கடி வந்து பார்த்துப்போம்..."

விசாலி மனமுவந்து சொன்ன வார்த்தைகள் இவை.

அன்றிரவு—

ராகவனின் அறைக்குள் வந்த சீதா, வழக்கம்போல தன் படுக்கையில் ஏறிப் படுக்க— ராகவன், நிதானமாய் அவளிடம் சொல்கிறான்.

"சீதா..."

"உம்...?"

"இன்னிக்கு பூஜையறையில ராதாகிருஷ்ணன் படம் போட்டிருந்தே இல்லே...? இனிமே அது மாதிரிப் படம் எல்லாம் போடாதே..."



"ஏன்?"

"அதெல்லாம் சாமி அறையில, தியானத்துல இருக்கறவங்களுக்கு இம்சையா இருக்கும். வேற எத்தனை விதமா வரையலாம் நீ... அம்பிகை, முருகன், ராமர் பட்டாபிஷேகம்... இது மாதிரி வரையறதுக்கு புராணத்துல விஷயமா இல்லே?"

"ராதாகிருஷ்ணனும் நல்ல சுவாமிதானே..."

"நல்ல சுவாமிதான்! ஆனா, நமக்கு வேண்டாம். வேண்டாம்னா, கிருஷ்ண பரமாத்மாவை எனக்குப் பிடிக்கலையின்னு அர்த்தம் இல்லே. உனக்கு கீதோபதேசம் வரையத் தெரியுமோ... காளிங்க நர்த்தனம்? அதெயெல்லாம் வரை. இது வேண்டாம். ஏன்னு விளக்கி சொன்னா உனக்குப் புரியாது!"

சீதாவும் இதற்குப் பிறகு ஏனென்று கேட்கவில்லை.

'என்னவோ, அவருக்குப் பிடிக்கலை. அதான் சொல்றார்...' —இப்படி தன்னைத்தானே சமாளித்துக் கொண்டாள்.

ஆனால், இதெல்லாம் எத்தனை நாளைக்கு...

சீதாவுக்கு அந்த வீட்டில் யாரைப் பிடித்ததோ, இல்லையோ... பூஜையறையில் இருந்த அம்பிகையைப் பிடித்திருந்தது.

வெள்ளிக்கிழமைகளிலும், பவுர்ணமியிலும் நடக்கும் பூஜை பிடித்து இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, வேதம் படிக்கும் குழந்தைகளைப் பிடித்திருந்தது.

பூஜை நடக்கும் நாட்களில் அந்த வீடு கல்யாணம் பட்ட பாடு படும். அந்தத் தெரு மட்டுமின்றி, அந்த ஊரே இவர்கள் வீட்டுக் கூடத்தில் கூடி விடும்.

ராகவன்தான் பூஜை செய்வான். ஆரம்ப காலத்தில் இவனது திடீர் பக்தியை கேலி செய்தவர்கள், இப்பொழுது பூஜைக்கு தவறாமல் விஜயம் செய்கிறார்கள்.

Vennila

அதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

நரசிம்மனின் தயவு இவர்களுக்கு வேண்டும். இன்று பூஜைக்கு போகாவிட்டால், நாளைக்கு இவரிடம் கடன் கேட்க முடியாதே என்கிற காரணத்துக்காக வருகிறவர்களே நிறைய.

பூஜை எப்படியோ, பாயசமும் சித்ரான்னமும் அமிர்தமாக இருக்குமே என்கிற நைப்பாசையில் வருகிறவர்கள் நிறைய பேர்.

இப்பொழுது இன்னொரு முக்கிய காரணமும் சேர்ந்து கொண்டது.

அது சீதா.

ராகவனை மணந்த சிறுமி, என்னமாய் இவனுடன் குடித்தனம் செய்கிறாள் என்பதைப் பார்ப்பதற்காகவே, அக்கம்பக்கத்தினர் வருகிறார்கள்.

சீதா வரையும் கோலம் வேறு, இவர்களுக்கு சிறப்பு கவர்ச்சியாய்...

சீதா ஓடி ஓடி வேலை செய்தாள்.

தனக்கு வாசலில், பூஜையறையில் மனம் போனபடி வரைவதற்கு அனுமதி கொடுத்ததற்கு நன்றி தெரிவிப்பது போல, அத்தனை காரியங்களையும் தானே வலிய வாங்கி செய்தாள்.

ஓடுகிற மாடு என்று தெரிந்தால், விரட்டுவதற்கு ஆள் பஞ்சமா என்ன...?

அவள் வரும் வரையில், லட்சுமியுடன் சேர்ந்து சமையல் வேலைகளை கவனித்துக் கொண்டிருந்த ஜனகம்-மெள்ள மெள்ள ஒதுங்கலானாள்.

"அக்கா, நீங்க நகருங்கோ. நான் வடைக்கு அரைக்கிறேன்.."



"மன்னி, குழந்தைகளை கவனிச்சு ஸ்கூலுக்கு அனுப்பற வழியப் பாருங்கோ. சமையலை நான் கவனிக்கிறேன்!"

இத்தனைப் பேருடனும் சகஜமாய் பேசி, வளைய வர முடிந்த அவளால், இரண்டே பேரிடம் மட்டும் வெட்கம் பிடுங்கித் தின்றது.

ஒன்று கிருஷ்ணன்.

அவர் வீட்டோடு இருந்து, மாமனாரின் கணக்கு-வழக்குகளைப் பார்த்துக் கொள்வதால், நேரங்கெட்ட நேரத்தில் சமையலறைக்குள் வருவார்.

வயசானத் திமிரில், கொஞ்சம் அதிகப்படியாகவே சீதாவிடம் உரிமை எடுத்துக் கொண்டு பேசக் கொடுப்பார்.

"சீதா, மளமளன்னு ஒரு சொம்பு மோர் கொடு பார்க்கலாம்... கவிக்!"

"என்ன... கிழவி மாதிரி பகல் தூக்கம்? சும்மா இருந்தா சோம்பேறித்தனம் வந்துடும். ஸ்டோர் ரூமை ஒழி. பரண்லே எலித் தொல்லை தாங்கலே... வர்றியா, நாம ரெண்டு பேருமா ஒழிச்சு வைக்கலாம்..."

"என்னைப் பார்த்தியா... எத்தனை சுறுசுறுப்பா இருக்கேன் பாரு. அப்படியில்லே இருக்கணும்...?"

"சீதா, உனக்கு ஒரு விஷயம் சொல்லட்டுமா...இந்த ராகவன், சாமி-பூஜைன்னு இறங்கினதே தப்பு. ஏறுடா இப்படிப் பேசறானேயின்னு நினைக்காதே! புதுசாக் கல்யாணமானவன் மாதிரியா இருக்கான் இவன்...? ரதி மாதிரி பெண்டாட்டி கிடைச்சிருக்கு. வச்சு அனுபவிக்கத் தெரியலையே...!"

"ராத்திரி உன் கூடப் பேசறதே இல்லையா அவன்? அடடா... நீயும் படுத்துத் தூங்கிடுவியாக்கும் .. இதுக்கா கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?"

Vennila

“சீதா, கிணத்தடியிலே உட்கார்ந்துக்கறேன். உன் கையாலே நாலு குடம் தண்ணி ஜில்லுன்னு இழுத்து என் தலையிலக் கொட்டேன். உடம்பு சூடேறிக் கிடக்கு. உங்க அக்கா பார்வதியென்னா கவனிக்கவே மாட்டேங்கறா...”

என்னதான் சீதா சின்னப் பொண்ணானாலும்-இவர், தன்னிடம் எடுத்துக் கொள்ளும் சலுகைகள் அநியாயமானவை என்பது வரையில் தெரிந்திருந்தது.

அவரைக் கண்டாலே ஓடி ஒளிய ஆரம்பித்தாள். மிகுந்த பத்திரமான இடம், பார்வதி அமர்ந்திருக்கும் இடம் தான். அங்கே வந்து உட்கார்ந்து விடுவாள்.

பார்வதி இருந்தால் மட்டும், கிருஷ்ணனின் பேச்சு, ஒரு அளவோடு இருப்பதை அவள் உணர்கிறாள்.

இரண்டாவது நபர்—

விசுவம்...

சின்னப் பையன்தான். இவளை விடவும் ஓரிரு வயதே பெரியவனாய் இருப்பான். மற்ற பெண்களிடம் உரிமையுடன் சிரித்துப் பேசுவதைப் போல அவனிடம் அவளால் பேச முடியவில்லை. இத்தனைக்கும் அவனும் அவளை மன்னி என்றே அழைக்கிறான்.

இருந்தாலும் என்னவோ பாழாய் போன வெட்கம்.

முதல் தடவை இவர்களுக்கு பழைய சோறு பிசைந்து போடப் போய் விசுவத்தின் கையிலிருந்த கரச்சட்டியை இவள் பிடுங்கினாள்.

“நன்னாயிருக்கு, ஆம்பிளை இந்தக் காரியமெல்லாம் செய்யறது? கொடு...”

“இருக்கட்டும் பரவாயில்லே. இத்தனை நாள் நான்தானே செஞ்சிண்டிருந்தேன்.”

இருவரும் இழுத்ததில் கரச்சட்டி உடைந்தது.

சீதா வெலவெலத்துப் போனாள்.



“அங்கே என்ன சத்தம்...”

பார்வதியின் இடிக்குரலுக்கு விசுவம்தான் அமைதியாய் பதிலளித்தான்.

“நான்தான்... கரச்சட்டிய கீழே போட்டுட்டேன்”

## 5

ராகவனின் கல்யாணத்துக்காகவே காத்திருந்த மாதிரி, நாணாவின் திருமணமும் பரசுவின் திருமணமும் சடபடவென முடிந்துவிட்டது.

ஆனால், அடுத்து வந்த இரு மருமகள்களுமே சீதாவை விட வயசில் பெரியவர்கள்தாம்.

நாணாவுக்கு வாய்த்தவள், கிருஷ்ணனின் அண்ணன் மகள்தான். டில்லி பெண்தான் நரசிம்மனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவளால் இருக்க முடியவில்லை என்றாலும் — அவரது செல்வாக்கும், கிராமத்திலேயே அந்த நாகரீகப் பெண் கேட்ட ஏர்கண்டிஷன் வசதியையும் அவரால் செய்து தர முடிந்தது.

“சுசீலா ரூமுக்கு மட்டும் ஏ. ஸி. யா— எங்க உடம்புக்கெல்லாம் ஏ. ஸி. ஒத்துக்காதா...?”

—இப்படி சிவகாமு பிலுபிலுவெனப் பிடித்துக் கொள்ள — நரசிம்மன் அத்தனைப் பேர்களுடைய அறைகளுக்கும் குளிர்சாதனப் பெட்டியைப் பொருத்தி விட்டார்.

ராகவனின் அறையைத் தவிர...

“எனக்கு அதெல்லாம் வேண்டாம். ஏன் சீதா, உனக்கு வேணுமா?”

சீதா புன்னகை மாறாமல் தலையசைத்தாள்.

“ஃபேன் இருக்கு. ராத்திரியில ஜன்னல் கதவைத் திறந்து வைச்சா, தோட்டத்துக் காத்தோட—இருவாட்சியும், ஜாதியும் போட்டி போட்டுண்டு மணக்கறது. ஏ. ஸி. வேற என்னத்துக்கு?”

Vennila

நரசிம்மன் அந்தப் பதிலில் உருகியேப் போய்விட்டார்.

இவளின் இந்தப் பதிலைக் கேட்டபடியே, ஜனகம் உள்ளே ஏலக்காயை உரலில் போட்டு இடிக்கிற சாக்கில் இவள் மண்டையையும் சேர்த்துப் போட்டு இடித்தாள்.

“கிராமத்துக் கடங்காரி இப்படி ஏதாவது சொல்லி, நல்ல பேர் வாங்கிண்டு போயிடறா...”

பார்வதி இதற்கு பதிலே பேசவில்லை. உள்ளூர அவளுக்கும் சீதாவை நினைக்கையில் ஜுரம் காய்கிறாற் போல இருக்கிறது.

கொஞ்ச நாளாகவே அவளும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறாள்— அவள் கணவன் கிருஷ்ணனின் கண்களில், சீதாவின் பெயரைக் கேட்டாலே வெட்டிடும் சபலத்தை. இத்தனைக்கும் தன் புருஷனை பெட்டிப்பாம்பாகத்தான் அடக்கி வைத்திருந்தாள்.

கிருஷ்ணன், புழக்கடையில் சீதாவுடன் பேசிக் கொண்டிருந்தால், பார்வதிக்கு உட்கார்ந்த இடத்தில் இருப்புக் கொடுக்காது. எழுந்து போகவும் உடம்பு இடம் கொடுக்காது.

“என்ன... எத்தனை நேரமாக் குளிக்கிறேள்? ஒரு நாழியா கிணத்தடியிலே உட்கார்ந்து, தண்ணிய இறைச்சு இறைச்சு காட்டிண்டே இருப்பேளே...கிணறே வறண்டு போற வரைக்கும் விட மாட்டேளே... சுருக்க வாங்கோ! ஜலதோஷம் பிடிச்சுக்கப் போறது...”

‘இதோ... இதோ வந்துண்டே இருக்கேன்...”

அவரும் சொல்லிக் கொண்டே இருப்பாரே தவிர, இலேசில் வர மாட்டார். வந்தாலும், தாமதமானதற்கு ஆயிரம் காரணங்களைச் சொல்லுவார்.

“இந்த சீதாவுக்கு இன்னும் மாட்டுக்குத் தீனி வைக்கவேத் தெரியலை! நான்தான் அதையும் சொல்லித்தர வேண்டியிருந்த. அவ பிறந்த வீட்டுலே பாலையே கண்



ணாலப் பார்த்திருக்க மாட்டா... மாட்டை எங்கே கண்டபடி...”

—கிருஷ்ணன் இழைந்து இழைந்து பேசுவார். பெண்டாட்டி மனம் குளிர, அவளுக்கு முதுகு வலிக்கத் தைலம் தேய்த்து விடுவார். புடவை மடித்து வைப்பார். மருந்து மாத்திரைகளை கையில் கொண்டு வந்து தருவார். நாலு பேரெதிரில் பெண்டாட்டியை உள்ளங்கையில் வைத்துத் தாங்குவது போல நேர்த்தியா நடிப்பார்.

“ஐயய்யோ... அவளுக்கு ஐஸ் வாட்டரா தந்தே... வெந்நீர்னா தாணும்... முதல்லே அந்தத் தம்ளரை உள்ளே கொண்டு போ...”

“பார்வதி, உனக்குப் பிடிக்குமேன்னு கமலா ஆரஞ்சு வாங்கிண்டு வந்தேன். உரிச்சுத் தர்றவா...?”

“ஏன் கண்ணு ரெண்டும் சிவந்திருக்கு? செவ்வா, வெள்ளி வாரத்துல ரெண்டு நாள் எண்ணெய் தேய்ச்சுக் குளிக்கறியோ, இல்லையோ..? இந்தா, உனக்கு சோம்பேறித்தனமா இருந்தாச் சொல்லு நான் தேய்ச்சு விடறேன். ஏன் நொடிக்கறே... தலைக்குதான்டி...”

சீதா வருவதற்கு முன்பெல்லாம் பார்வதி, தன் கணவனை வாயில் விரலை கொடுத்தால் கூட, கடிக்கத் தெரியாத குழந்தைன்றே நம்பி வந்தாள்.

தன் வீட்டிலேயே ராகவன் ஒருவன்தான் பெண்பித்து என்கிற அலட்சியமும் அவள் மனசில் இருந்து வந்தது. இப்பொழுது ராகவன் உத்தமனாகி விட்டான். இவர் போக்குதான் அவளை பிரமிக்க வைத்தது.

“இந்தச் சின்னப் பொண்ணுக்கிட்டப் போய் விவஸ்தை இல்லாம என்ன பேச்சும் சிரிப்பும் வேண்டிக்கிடக்கு?”

போதாக்குறைக்கு — சுசீலா, வந்த பத்தாம் மாதமே கையில் குழந்தை.

Vennila

புகுந்த வீட்டுக்கு வந்து இரண்டு வருஷங்களாகியும் சீதாவே ஒரு குழந்தையாகத்தான் இருந்தாள்.

இது ஒரு பெரிய விஷயமாகி விட்டது கிருஷ்ணனுக்கு. தன் நிலை மறந்து, மனைவியிடமே பேசத் தொடங்கினார்

"உன் தம்பி அநாவசியமாக ஒரு கல்யாணம் செஞ்சுண்டே இருக்க வேண்டாம். பணத்துக்கு ஆசைப்பட்டு, கொண்டு வந்துத் தள்ளினானே அவ மாமன்... அவனைச் சொல்லணும்..."

"ஏன்?"

"அவன் சந்யாசி வேஷம் போடறது எல்லாம் சும்மா... ஒரு கண் துடைப்புக்காக... ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி ஓய்ஞ்சுட்டான். காயடிச்ச மாடாயிட்டான்..."

"சும்மாயிருங்கோ! இதே வார்த்தைய அவன் நம்மைப் பார்த்துச்சொல்ல எத்தனை நேரமாகும்...?"

"நான் 'சர்டிபிகேட் வச்சிருக்கேன்டி. எந்த கோர்ட்டுல வேணுமானாலும் நிரூபிக்க முடியும். இவன் சங்கதி எனக்குத் தெரியும். தினம் ராத்திரி கோவில் சாத்தற சமயத்துலப் போய் சாமியப் பார்த்துட்டு, அப்படியே ஓமியோபதி டாக்டர் வெங்கண்ணாவைப் பார்த்துட்டு வர்றான். லேகியம் கொடுத்திருக்கார், லேகியம்..."

"காணாததை கண்ட மாதிரி சொல்லாதீங்கோ..."

"நான் எதுக்குப் பொய் சொல்லணும்? உன் தம்பிக்காக சிட்டுக்குருவி லேகியம் வாங்க குடவாசலுக்கு ஆள் போயிருக்கு. வரட்டும், பில்லைக் காட்டறேன்.

"ஐயோ... யார் எங்கேடோ கெட்டுப் போகட்டும். நமக்கென்ன?"

"நமக்கென்ன... ஒன்னுமில்லே! இதே பிள்ளையாண்டான். நமக்கு கல்யாணமாகி அஞ்சு வருஷமாகியும் குழந்தை இல்லைபின்னு என்னெல்லாம் சொல்லி இருக்கான்... அன்னிக்குத் திமிர். ஊர்ல இருக்கற



பொம்மனாட்டிகளிலே பாதிப் பேருக்கு இவன் அபார்ஷனுக்கு செலவு செஞ்சானில்லே... இப்பப் படறான்..."

பார்வதிக்கு, கிருஷ்ணனிடம் வெளிப்படையாய் சண்டை போட்டுக் கொள்ள முடியாத நிலை! அத்தனையையும் சீதாவிடம்தான் காட்டினாள்.

"எங்கே ஒழிஞ்சுப் போனே...இங்கே வா! அடுப்பைப் பத்த வச்சு. தோசைக் கல்லைப் போடு."

"சுசீலா குழந்தை சிரிச்சு, சிரிச்சு மயக்கறது அக்கா..."

"ஆமா, உன்னை யார்தான் மயக்கலே. அகமுடையானை மட்டும் உனக்கு இன்னும் மயக்கத் தெரியலே... அசடு!"

சீதா சிறிது நேரம் அவளையேப் பார்த்தபடி நிற்பாள்.

'இவள் என்ன சொல்லுகிறாள்?'

நரசிம்மன் கூட அவளிடம் ஜாடைமாடையாய் சொல்ல ஆரம்பித்து விட்டார்.

"நீ எப்பம்மா எனக்கு தாத்தா பட்டத்தைத் தரப் போறே? சுசீலா கூட முந்திட்டா..."

ஒருநாள் இரவு அவள் இதுபற்றி ராகவனிடம் கேட்டே விட்டாள்.

"உங்க அம்பாள் கிட்டே எனக்காக ஒன்னு கேளுங்களேன்..."

"என்ன?"

"எனக்கு ஒரு குழந்தை வேணும்னு. போன வாரம் ஊருலேயிருந்து வந்த எங்க மாமி கூட, 'என்னடி இன்னும் அசடாவே இருக்கே'ன்னு கேட்டுட்டா. குழந்தை பெத்துக்காதவா எல்லாம் அசடா?"

Vennila

“சீச்சீ...இப்பப் பாரு. அக்கா இல்லையா...எப்ப நேரம் காலம் சரியா இருக்கோ. அப்ப தானா எல்லாம் சரியாயிடும். இதுக்காக எல்லாம் நீ கவலைப்படாதே தங்கு!”

மறுநாள்—

பார்வதியும் மற்ற பெண்களும் பக்கத்து கிராமத்தில் கல்யாணத்துக்குப் போயிருக்க—கிருஷ்ணன் படு சுதந்திரமாய் புழக்கடைக்கு வந்தார்.

சீதா, சிமெண்டு தரையில் சாக்பீஸினால் வரைந்து கொண்டு இருந்தாள். மானும் மயிலும், பாய்ந்து வரும் யானையும். அந்த யானையை அடக்க கையில் வேலோடு வரும் வீரனும்...

விசுவமும் மற்ற சிறுவர்களும் ஒரே உற்சாகத்துடன் இதை கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

கிருஷ்ணன் இதை எதிர்பார்க்கவில்லை. சாதாரணமாய் வீட்டில் பெண்கள் யாரும் இல்லையென்றால், மாணவர்கள் வீட்டுத் திண்ணையில் படித்துக் கொண்டோ, அல்லது வெய்யிலில் காயப் போட்டிருக்கும் பயறு வகைகளைக் காவல் காத்துக் கொண்டோ இருப்பார்கள்.

இப்படி சீதாவுடன் சகஜமாய் விளையாடி, அவர் பார்த்ததே இல்லை.

மேலும்— சீதா மட்டும் புழக்கடையிலோ, சமையலறையிலோ இருப்பாள் என்று நம்பி வந்தவருக்கு, இந்தக் கூட்டம் ஏமாற்றத்தை அளித்ததில் வியப்பே இல்லை.

விசுவத்திடம் எரிந்து விழுகிறார்.

“என்னடாது... கொஞ்சம் இடம் கொடுத்தா, மடத்தையே பிடுங்கிடுவீங்க போல இருக்கே...இங்கே என்ன உங்களுக்கு வேலை?”

“மன்னி படம் வரையறதைப் பார்த்துண்டிருந்தோம்”



“தனியா ஒரு பொம்மனாட்டி இருக்கறப்ப இப்படித் தான் வந்து சிரிக்கக் கொட்டம் போடறதா...? ராகவனோ, பெரியவரோ பார்த்தா அவ்வளவுதான். ஊருக்கு லெட்டர் பறந்திருக்கும் இந்நேரம்...”

அவ்வளவுதான்—அத்தனைக் குழந்தைகளும் வாசலை நோக்கி சிட்டாய் பறந்து விட்டன.

விசுவம் மட்டும் தனித்து நின்றான்.

‘அவாளுக்கு சொன்னதுதான் உனக்கும். உனக்கு வேற தனியா சொல்லணுமா?”

“எனக்கு சொன்னதுதானே அத்திம்பேர்- உங்களுக்கும்—”

“என்னடா சொல்றே?”

“பொம்மனாட்டி இருக்கற இடத்துல—அதுவும் தனியா இருக்கற இடத்துல, உங்களுக்கு மட்டும் என்ன வேலை? வாங்கோ, ரெண்டு பேருமா வாசலுக்குப் போகலாம்.”

விசுவம் முன் மாதிரி இல்லை. இப்பொழுது அவன் சிறுவர்களுடன் சேர்த்தியில்லை. உதட்டோரத்தில் பூனை ரோமம் அரும்பி விட்டது. குரல் உடையத் தொடங்கி விட்டது. மார்பும் முதுகும் அகன்று, ஊஞ்சல் பலகை மாதிரி இருக்கிறது.

இருந்தும்— சீதாவுக்கு, இரண்டு வருஷங்களுக்கு முன்னால், தான் உடைத்த ஈற்சட்டிக்காக பழி சுமந்த இனிய சிநேகிதன்தான்.

இன்னமும் இந்த நட்பில் கள்ளம் புகவில்லை. அதனாலேயே, அவன் கிருஷ்ணனிடம் இப்படிச் சொன்னதும். அவள் ‘களுக்'கெனச் சிரிக்கிறாள்.

கிருஷ்ணன், சீதாவை உறுத்துப் பார்க்கிறார்.

“என்ன சிரிப்பு? யார் என்ன சொன்னாலும் இப்படி சிரிக்கறது பொண்களுக்கு— அதுவும்குடும்பப் பொண்களுக்கு



Vennila

அழகில்லே தெரியுமா? போ...போய் ஒரு தம்ளர் ஜில்லுன்னு மோர் கொண்டா...''

அவன் தயங்கியபடி உள்ளே போனதும், அவர் விசு வத்தை முறைத்துப் பார்க்கிறார்.

''அதிகப்பிரசங்கித்தனமாய் பேசறதை நிறுத்திக்கோ முதல்லே... உன் இடம் எதுவோ, அதுல நில்லு போ. உங்கப்பா பரிசாரகராத்தானே இருக்கார்...?''

''......''

''ஏதோ, தன்னை மாதிரி கரண்டி தூக்காம, பிள்ளை யாவது வேதவித்தா இருக்கட்டுமேன்னுதான் இங்கே உன்னை அனுப்பியிருக்கார். நீ போற போக்கைப் பார்த்தா, வேதமும் இல்லே, சாதமும் இல்லேன்னு உன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுப்பே போல இருக்கு. போ... போ.''

விசுவம் அதற்கு மேல் ஒரு கணம் கூட அங்கு நிற்க வில்லை. விடுவிடுவென வாசலுக்குப் போய் விட்டான்.

மோர் கொண்டு வந்த சீதாவை, கடுப்பு நீங்கா மலேயே முறைத்துப் பார்க்கிறார், கிருஷ்ணன்.

''யாருமில்லாதப்ப இவனுங்களை எல்லாம் உள்ளே வரவிடவே கூடாது!''

''பேச்சுத் துணைக்கு யாருமில்லே.. விசுவம் நல்லவன்...''

''ஓ— அந்த அளவுக்கு அவன்கிட்டப் பழகிட்டியாக் கும்... இங்கே பாரு, உள்ளதை மறைக்காமச் சொல்லு. அவன் கூட எத்தனை நாளாப் பழக்கம்?''

விகல்பமே அறியாத சீதா, வெகுளியாய் பதிலளித் தாள்.

''ஏன், இங்கே நான் வந்ததுலேயிருந்து...''

''அப்ப... ரெண்டு வருஷமா...''



''ஆமா...''

''எதுவரைக்கும் அனுமதிச்சிருக்கே?''

''அப்படீன்னா...''

''புரியாதது மாதிரி நடிக்கப்படாது. அவன் கூட படுத்துக்கற அளவுக்குப் போயிட்டியா?''

சீதாவுக்கு விவரம் புரியவில்லை என்றாலும், அழுகை துளிர்த்தது.

''இவன் கூட நான் என்னத்துக்கு...''

''பொய் கூடாது. ராகவன் உன்கிட்ட பிரியமா நடந் துக்கறானா...''

''அவர் எல்லார்கிட்டயும் பிரியமா நடந்துக்கற மாதிரி தான், என்கிட்டயும்...''

''பூசி மழுப்பறே பாரு... இதோ, இங்கே பாரு...''

திடீரென எழுந்த கிருஷ்ணன், அவள் எதிர்பாராத விதமாய் இறுக அணைக்க—

குன்றிப்போய் விட்டாள் அவள்.

அழுகையில் குரல் அமுங்கிப் போகிறது. பலம் கொண்ட மட்டும் அவரை உதறித் தள்ளுகிறாள்.

''ச்சீ...விடுங்கோ. அக்கா வந்தாச் சொல்லுவேன்.''

கிருஷ்ணன் விலகி நின்று, அவளை ஆத்திரத்துடன் பார்க்கிறார்.

''ஏன்...நான் அணைச்சா, விசுவம் மாதிரி இல்லையாக்கும்?''

''அவனை எதுக்கு இழுக்கறேள்...பாவம்! அவன் ஏதோ விளையாட்டா பேசிண்டிருந்தான்...''

சீதா விம்மி அழுகிறாள்.

''இங்கே பாரு...அம்மா அவனுக்குப் ப...

ராகவன் கிட்ட கிடைக்காததை விசுவம்...

Vennila

நான் தரக் கூடாதா? என்ன பண்ணுவியோ. ஏது பண்ணுவியோ தெரியாது...இன்னும் ரெண்டு நாளுல புழக்கடை தட்டுமுட்டு சாமான் போட்டு வச்சிருக்கிற இடத்துக்கு ராத்திரி வந்து சேரு. எப்ப வர்றேன்னு முன் கூட்டியே என்கிட்ட சொல்லிடு.''

''எதுக்கு?''

''எதுக்கா...விசுவத்தோட...எதுக்கு தனியாப் பேசுறே? உனக்கு மட்டும் சமர்த்து இருந்தா, இந்த வீட்டுல எச்சில் இலை எடுத்துட்டிருக்கமாட்டே நீ...ராணி மாதிரி இருப்பே...''

அவர் மறுபடியும் அவளருகில் நெருங்கி வந்தார். அவளோ. அவசரமாய் சமையலறைக் கதவைச் சாத்தப் போனாள்.

விடவில்லை—அவளது வலக்கரத்தை கெட்டியாய் பிடித்துக் கொண்டு சொல்கிறார், அவர்.

''இது விஷயம் பத்தி யார் கிட்டயும் மூச்சு விடக் கூடாது. அப்படி சொன்னேயின்னு தெரிஞ்சது—உனக்கும் விசுவத்துக்கும் இடையிலே உள்ள கள்ளக்காதலை அம்பலத்துக்குக் கொண்டு வந்துடுவேன்.''

அவர் இதைச் சொல்லிவிட்டு, வேகமாய் வெளியேறி விட்டார்.

சீதா பிரமை பிடித்தவள் போல உட்கார்ந்திருந்தாள்.

கல்யாணத்துக்குப் போனவர்கள் திரும்பி வந்து பூஜையறையோடு ஐக்கியமாகி இருந்த ராகவன், சாயங்கால விளக்கேற்றச் சொல்லி மனைவியை அழைத்து ..

சீதா விளக்கேற்றி விட்டு, அம்மனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்பொழுதெல்லாம் அந்த வீட்டு பூஜையறை ஒரு கோவில் மாதிரி ஆகிவிட்டது.



யார் யாரோ வருகிறார்கள். பெண்ணுக்கு திருமணம் நடக்க வேண்டும் என்றும் பிள்ளைக்கு வேலை கிடைக்குமா என்றும் சீட்டு எழுதிக் கொண்டு வந்து, ராகவனின் பாதத்தில் வைக்கிறார்கள்.

அவன் காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுகிறார்கள்.

எப்பொழுதும் யாராவது அவனைச் சூழ்ந்த வண்ணம் இருக்கிறார்கள்.

அவனுமே கூட, இனி இந்தப் பிறவி இதற்குத்தான் என்பது போல நடந்து கொள்கிறான். டாக்டர் வெங்கண்ணாவே கூட, வெள்ளிக்கிழமை தவறாமல் அவனது பூஜைக்கு வருகிறார். லேகியம் சாப்பிடுவதைக் கூட நிறுத்தி விட்டான் அவன்.

பூஜையும், ஒருபொழுது ஆகாரமும் சேர்ந்து, அவனுள் ஒருவித சாந்தத்தன்மையை சிருஷ்டித்து விட்டது.

சீதா என்கிற ஜீவன், தனது படுக்கையறையில்-கட்டிலின் ஒரு மூலையில் சுருண்டு படுப்பது கூட அவனுக்கு மறந்துவிட்ட நிலை.

இரவு இவனிடம் சொல்ல வேண்டும் என்று காத்திருந்தால், அவன் பூஜையறையில் மான் தோலிலேயே படுத்துத் தூங்கி விடுகிறான்.

அன்று சீதாவும் ஒரு காகிதத்தில் சுருக்கமாய் இரண்டு வரி எழுதி, எல்லோரையும் போல அவன் பாதத்தில் வைக்கிறாள்.

அவனை நிமிர்ந்துப் பார்க்க முடியாமல், கண்ணீர் மறைக்கிறது.

## 6

நடந்ததைக் கேட்டு பிரமைப் பிடித்தவன் போல் உட்கார்ந்திருக்கிறான், ராகவன்.

Vennila

சீதா, கட்டில் விளிம்பைப் பிடித்தபடி, ரகசியமாய் விம்முகிறாள். நாணாவின் மனைவிக்கோ, ராகவின் மனைவிக்கோ இது மாதிரி ஒரு தர்ம சங்கடமான நிலை ஏன் வரவில்லை என தனக்குள் கேட்டுக் கொள்கிறாள்.

தாலி கட்டிய கணவனுக்கு சீட்டெழுதிக் கொடுத்து பேச வேண்டுமா? இது என்ன வேடிக்கை?

ராகவன், மெள்ள ஒவ்வொரு வார்த்தையையும் மனக்குள் ஒரு தடவை யோசித்து பின் கேட்கிறான்.

"சீதா, விசுவம் உன்கிட்ட எப்படி பழகறான்..."

இந்த தடவை சீதா சமர்த்தாக பதிலளிக்கிறாள். கிருஷ்ணனிடம் மாட்டிக் கொண்டு, திண்டாடியதற்குப் பிறகு இந்த மூன்று நாட்களுக்குள் ஒரு ஆணுடன் சிநேகம் என்றால்- இவர்கள் கற்பனைப்படி என்ன அர்த்தம் என்பதை ஓரளவுக்கு புரிந்து கொண்டிருந்தாள்.

சீதா பள்ளிக்கூட நட்பைத் தவிர நட்புக்கு வேறு பல அர்த்தங்கள் உண்டு என்பதையே இப்பொழுதுதான் அறிந்திருக்கிறாள். அதுவும் விசுவம் சொல்லித்தான்.

கிருஷ்ணனுடன் தகராறு நடந்த பிறகு சீதா, குழந்தைகளுக்கு தினமும் பிசைந்து போடும் காலை பழையமுது பக்கம் கூட வரவில்லை.

விசுவம் சமையலறை நிலைப்படியில் நின்றபடி கேட்டான்:

"மன்னி, எல்லாரும் உட்கார்ந்தாச்சு. சாதம் போடறேளா..."

சீதாவுக்கு துக்கம் பொங்கி பொங்கி வந்தது. சிரமப்பட்டு தன்னை அடக்கிக் கொண்டு, விசுவத்தைப் பாராமல்-சுவரைப் பார்த்தபடி பதிலளித்தாள்.

"நீயே பிசைஞ்சு போடு விசு.."

அவன், அவளை ஒரு முறை ஆழமாய் பார்த்து விட்டு, பாத்திரத்தை கையிலெடுத்தான், அவனுக்குத்



தெரியும்; குழந்தைகளுக்கு சாப்பாடு பரிமாறும் வேலையை மட்டும் சீதா, யாரிடமும் இது வரையில் கொடுத்ததில்லை.

ஒவ்வொரு வயிற்றின் அளவும் அவளுக்குத்தான் தெரியும். பகல் சாப்பாட்டின் பொழுதும்-யாருக்கு எது பிடிக்கும் என்பதைப் பார்த்து, அதற்கேற்ப பரிமாறுவாள்.

பகல் சாப்பாட்டின் பொழுதாவது நரசிம்மனும், ராகவனும் குழந்தைகளுடன் உட்காருவார்கள். ஒருத்தரைப் பார்த்தாற் போல எல்லாருமே முகத்தை படு தீவிரமாய் வைத்துக் கொண்டு சாப்பிடுவார்கள்.

"போறும் மன்னி..."

"போட்டுக்கோடா சுப்புணி. பறங்கிக்கா பால் கூட்டுன்னா உனக்குப் பிடிக்குமே..."

"மோர் சாதம்தான் எப்பவும் இருக்கு. இன்னும் கொஞ்சம் சாதம் போட்டு, பருப்புருண்டை போட்டு பிசை... உம்..."

சீதா, ஒவ்வொரு இலையையும் தனித்தனியே கவனிப்பாள்.

"ராமனுக்கு வறுகாய் போடாதீங்கோ மன்னி. ஏற்கனவே வயித்து வலின்னு சொல்லிண்டிருந்தான்"

ஒவ்வொரு சிறுவனும் சீதா வந்த பிறகு கொஞ்சம் சதை போட்டிருக்கிறான்தான்.

இதுவே காலையில் பழைய சாதம் சாப்பிடும் பொழுது இவர்கள் ராஜ்ஜியம்தான்.

இந்தப் பந்தி இரண்டாம் கட்டின் முற்றத்தில் நடைபெறும், அந்தப் பக்கம்-அந்த நேரத்தில் யாரும் எட்டிக் கூடப் பார்க்க மாட்டார்கள். அவரவர்களுக்கு அவரவர் வேலை...

"சீதா மன்னி. இவன் என் நார்த்தங்காய எடுத்து ஓட்டு மேல விட்டெறிஞ்சிட்டான்..."

Vennila

"ஏண்டா அப்படி பண்ணினே.... இரு இரு... பெரிய அக்கா வந்து உன்னைக் கிழிச்சு தோரணம் கட்டப் போறா..."

"பின்னே என்ன? சுசீலா மன்னிக்கு பொண்ணு தான் பொறக்கும்னு சொன்னான் இவன். இல்லே, பிள்ளைதான்னேன் நான்... யார் ஜெயிக்கிறோமோ அவங்க சொன்னதை தோத்தவன் கேட்கணும். இன்னும் ஒரு வாரத்துக்கு இவன் உப்பு போட்டு பழையது சாப்பிடக் கூடாதுன்னு சொன்னேன்..."

சீதா, இவர்களுக்குள் சமாதானம் செய்து வைப்பாள்.

வெளியுலகத்துக்கும்-சீதாவுக்கும் ஒரு பாலமாக இருப்பதே இவர்கள்தான்.

"மன்னி, கமல் தெரியுமோல்லியோ .. கமல்.. அவர், தான் படிச்ச பள்ளிக்கூடத்துக்கு லட்ச ருபா நிதி கொடுத்தாராம்..."

"சிவா கூட கொடுப்பான். பெரியவனாகி வேதமெல்லாம் படிச்சு வித்வானானதுக்கு அப்புறம்-இந்த வேத பாடசாலைக்கு நிறைய கொடுப்பான். இல்லே சிவா..."

"இங்கேதான் எல்லாம் இருக்கே..."

"ஏதாவது இல்லாததாக் கொடு..."

"சீதா மன்னிக்கு குழந்தைகள்னாத்தானே ஆசை... நான் பெரியவனானதும் பத்துக் குழந்தைகளை மன்னிக்கு டொனேஷனாத் தரப்போறேன்..."

"ஓ...ஹோ..."

"உஷ். சிரிக்காதீங்கோ. அக்கா எட்டிப் பார்க்கறா. சிவா சொன்னதுல என்ன தப்பு? எனக்கு குழந்தைகள்னா கொள்ளைப் பிரியம் தான். நீ தாடா சிவா. ஒவ்வொண்ணையும் நான் வளர்க்கறேன்"



விசுவம்-இவருடன் அதிகம் பேசாவிட்டாலும் இவளது பேச்சை புன்னகையுடன் ரசித்துக் கொண்டிருப்பான்.

"போறும் மன்னி... நான் நிறைய சாப்பிட்டுட்டேன். அளவே தெரியலே..."

"என்னத்தை சாப்பிட்டே கோழி மாதிரி கொறிச்சே. இப்படியிருந்தா எப்படிடா, உங்கம்மாவை உட்கார வச்சு சம்பாதிச்சுப் போடுவே?"

அன்று...

குழந்தைகள் தங்கள் அருமை சீதா மன்னியை காணாமல்-அரை வயிற்றுக்கு சாப்பிட்டதாய் பேர் பண்ணி விட்டுத்தான் எழுந்தார்கள்.

விசுவம் சாப்பிடவில்லை. சீதா, மாட்டுத் தொழுவத்துக்குப் போவதைப் பார்த்து விட்டு, மெள்ள பின்னாலேயே போனான்.

"மன்னி..."

அவள் திடுக்கிட்டு திரும்பினாள்.

"என்ன ஆச்சு. ஏன் ஒரு மாதிரியா...அடடா, அழற அளவுக்கு என்ன நடந்தது?"

சீதா, முகத்தைமூடிக் கொண்டு சிறிது நேரம் அழுதாள். பின், முகத்தை அழுந்தத் துடைத்தபடி முதல் நாள் நடந்ததைச் சொன்னாள்.

"...என்னென்னமோ அசிங்கமாப் பேசறா. இந்த அத்திம்பேர் ரெண்டு நாளுல அவருக்கு நான் ஒரு முடிவு சொல்லியாகணுமாம். விசு, உன் கூட நான் பழகறது தப்பா?"

"அப்படியின்னு அவர் சொன்னாரா?"

"ஆமா...நீ ஸ்கூல்லே படிச்சிருக்கியோ...நான் எட்டாங் கிளாஸ் வரைக்கும் கோ எஜுகேஷன்லேதான் படிச்சிருக்கேன். எல்லாப் பசங்களும் [illegible] பொறந்த

Vennila

"எனக்கு குழந்தை வேண்டாம். வேற எந்த சுகமும் வேண்டாம். பேசாம என்னை பழையபடி எங்க மாமா கிட்டே அனுப்பிடுங்கோ ஏதோ-சாப்பாட்டுக்கு துணிக்கு பணம் அனுப்பினாப் போதும். நான், என் வரைக்கு மானமா இருப்பேன்..."

"எப்படி சீதா, அப்பா உன் மேல ஏகப்பட்ட பிரியம் வச்சிருக்கார். மேலும் இன்னிக்கு என்னை எல்லாருமே ரொம்ப உசத்தியா நினைச்சு கொண்டாடறா—ளார் உலகத்துல எந்தெந்த மூலையில இருந்தெல்லாமோ—என்னைத் தேடி ஜனங்க வந்து குவிஞ்சபடி இருக்கா. இந்த நேரத்துல என் உடம்பு நல்லபடியா இருந்து ஒரு குழந்தைக்கு தகப்பனானாலும் அசிங்கம். உன்னை பொறந்த வீட்டுலக் கொண்டு போய் விட்டாலும் அசிங்கம்...'

"அந்த மனுஷர்கிட்டே பேச்சு வாங்கறேனே நான். அது மட்டும் அசிங்கமில்லையா? ராத்திரி கிளம்பி வரச் சொல்றான். அது அசிங்கம் இல்லையா? உங்க ஞானம் இதைத்தான் எனக்கு உபதேசிக்கிறதா?'

"வேற என்னை என்ன செய்யச் சொல்றே?"

"எதுவும் எனக்கு வேண்டாம். உங்க அக்கா புருஷனையாவது நீங்க தனியே கூப்பிட்டு இத பத்தி பேசலாம் இல்லையா? இல்லே, அக்கா கிட்ட சொல்லி கவனிக்க சொல்லலாம் இல்லையா? நான், யார்கிட்டயும் இது பத்தி பேசமாட்டேன்கற தைரியத்துலதானே அவர் இப்படிப் பேசறார்..."

"நீ நினைக்கறது தப்பு சீதா. நீ இது பத்தி யார் கிட்டயும் சொல்லுவியோங்கற பயம் இல்லைங்கறது மட்டுமில்லே. இது பத்தி நானும் அவர்கிட்ட பேசமாட்டேன்கற தைரியம். அப்படியே நான் அவர்கிட்டயோ இல்லே பார்வதிகிட்டயோ பேசினா, உடனேயே அவர் விஷயத்தை வேற மாதிரி திசை திருப்புவார். உனக்கும் விசு



வத்துக்கும் கள்ளத் தொடர்பு இருந்ததாகவும், அதை தன் கண்ணாலப் பார்த்துட்டதுனால நீ இப்படியொரு பழியைத் தூக்கி அவர் தலையிலப் போடறதாகவும் கூசாமச் சொல்லுவார்"

சீதா இந்தப் பதிலில் மிரண்டு போய் விட்டாள்.

"அப்ப என் கதி...?"

"சாமர்த்தியமா சமாளி. விசுவத்தோட அதிகமாப் பேச்சுவார்த்தை வச்சுக்காதே! அவனை வேறுமானா வேதம் படிச்சது போறும் நீ ஊரைப் பாக்க கிளம்புன்னு என்னால சொல்ல முடியும்"

"ஆக ஆதரவா இருக்கறவனை அடிச்சு விரட்ட முடியும். அயோக்கியத்தனம் பண்றவரை அசைக்கக் கூட முடியாது. அப்படித் தானே"

"......"

"இங்கே பாருங்கோ. நான், இந்த வீட்டுல எனக்கு நடந்ததை எங்கேயும் மூச்சு விடமாட்டேன். என்னை வெட்டிப் போட்டாக்கூட உங்களைப் பத்தி குறை கூற மாட்டேன். என்னை எங்கேயாவது அனுப்பிடுங்கோ, மாமா கிட்ட அனுப்ப முடியாதுன்னா-ஏதாவது டிரெயினிங் ஸ்கூல்லே சேர்த்துடுங்கோ. நான் பாட்டுக்கு என் வயித்துப் பாட்டுக்கு சம்பாதிச்சுண்டு உலகத்துல ஏதாவது ஒரு மூலையில..."

"நடக்காத விஷயத்தைப் பத்திப் பேசாதே சீதா. நீ வெளியிலப் போய் டீச்சர் டிரெயினிங்குக்குப் படிச்சா—எங்க குடும்பத்துக்கு அவமானம். அதுக்கு அத்திம்பேர் மாதிரி ஆயிரம் பேரை ரகசியமா நீ சமாளிக்கலாம்.

"இப்பக் கூடச் சொல்றேன். விசுவத்துக்கிட்ட உனக்கு பிரியம் விழுந்திருக்குன்னா நான் அதைத் தப்பாவே நினைக்கலை. என்னாலத் தர முடியாததை வேற யாராவது உனக்கு தந்துதானே ஆகணும். ஆனா இந்த

Vennila

பொறப்பாட்டமா...விசுவோட படுத்துக்கலாம்; என்னோடக் கூடாதான்னு கேட்கறார்டா...''

விசுவத்துக்கு முகம் சிவக்கிறது. விழிகள் கோலிக் குண்டு மாதிரி புடைக்கிறது.

''இந்தக் கிழத்துக்கெல்லாம் சினேகத்துக்கு அர்த்தமே தெரியாது மன்னி. இவர்கிட்டப் போய், நீங்க எனக்காகப் பரிஞ்சி பேசியிருக்கவே கூடாது. படுக்கையைத் தவிர ஃப்ரெண்ட்ஷிப்புக்கு வேற அர்த்தமில்லைங்கற மிருகம் இவா எல்லாரும்...''

''இவர் நம்மைப் பத்தி என்ன நினைக்கிறார்?''

''நாலஞ்சு மாசம் முன்னாடி-நம்ம ஊர் பள்ளிக்கூடச் சுவருல எல்லாம் வக்கீல் பொண்ணு பங்கஜத்துக்கும் ஸ்கூல் வாத்தியார் சூரிய நாராயணனுக்கும் கள்ளக்காதல் இருக்கறதா எழுதித் தள்ளியிருந்தாங்க பசங்க. விஷயம் வேதபாடசாலை வரைக்கும் வந்ததே...ஞாபகமிருக்கா?''

''ஆமா...''

''நம்ம ரெண்டு பேரையும் கிருஷ்ணன் இப்படித்தான் நினைக்கிறார்''

''ஐயோ...''

சீதா கன்னத்தில் கை வைத்து இடிந்து போனாள். அப்பொழுது தான் விசுவம் சொன்னான்.

''நீங்க நடந்ததை அப்படியே அண்ணாக்கிட்டே சொல்லுங்கோ. அவர் ஞானி, எல்லாத்துக்கும் ஒரு நல்ல முடிவு சொல்லுவார்''

சொன்னாள்.

இப்பொழுது ராகவனுக்கே சந்தேகம்.

''விசுவம் உன்கிட்ட எப்படிப் பழகறான்''

''கூடப் பொறந்தவன் மாதிரி!''



''அத்திம்பேர் இது வரைக்கும் எந்தப் பொண்ணு கிட்டேயும் இப்படி நடந்துண்டதில்லே சீதா, உனக்கு அப்புறம் இந்தக் குடும்பத்துல ரெண்டு மருமகள் வந்தாச்சு. அவாகிட்ட எல்லாம் டீஸண்டாத்தானே நடந்துக்கறார்''

சீதாவுக்கு அவமானம் குத்திப் பிடுங்கியது. தன்னை மீறி வெடித்து விட்டாள்.

''நான்தானே இங்கே நாதியத்துப் போய் வந்திருக்கேன். எனக்கு ஏதாவது நடந்ததுன்னா சொல்லிண்டு அழ. அம்மா கூட இல்லே. உங்க கிட்டச் சொல்லலாம்னா உங்களுக்கு ஊர் கவலையைத் தீர்த்து வைக்கவே நேரம் சரியா இருக்கு''

''இப்ப என்னை என்ன செய்யச் சொல்றே சீதா?''

''எனக்கு ஒரு குழந்தை இது வரைக்கும் கிடைக்கலையின்னா அதுக்கு காரணம் கடவுள் கண் திறந்து பார்க்காததுதான்னு நினைச்சேன். இப்பத்தான் அத்திம்பேர் சொல்றார் குழந்தை பெத்துக்க-அகமுடையான் அனுக்கிரகமும் வேணும்னு...எல்லாரையும் போல நானும் இருந்திருந்தா எனக்கு ஏன் இந்தக் கதி?''

ராகவன். சிறிது நேரம் மவுனமாய் அவளையே வெறித்தான்.

''அத்திம்பேர் சொல்றது ஒரு விதத்துல சரிதான் சீதா. என்னால உனக்கு எந்த சுகமும் கிடைக்காதுங்கறப்ப-ஒரு குழந்தைய எபபடிக் கொடுக்க முடியும்? இது நான் செஞ்ச பாவங்களுக்கு அம்பாள் கொடுத்த தண்டனை...''

''இல்லே. நீங்க செஞ்ச பாவத்துக்கு-கடவுள் எனக்கு கொடுத்த தண்டனை''

ராகவன் வியப்புடன் சீதாவைப் பார்க்கிறான்.

''சின்னப் பெண் எப்படிப் பேசுகிறாள்''

அவள் உறுதியாகச் சொன்னாள்.

Vennila

மாதிரி விஷயங்கள் எல்லாம் மூணாம் மனுஷருக்குத் தெரியாம காதும் காதும் வச்ச மாதிரி இருக்கணும். அசட்டுத்தனமா மாட்டிக்கக் கூடாது. அப்படியே மாட்டியாச்சா... அப்புறம் அந்த மூணாம் மனுஷனையும் உன் சாமர்த்தியத்தாலே அட்ஜஸ்ட் பண்ணிட்டுத்தான் போகணும்..."

சீதா அவனையே வெறித்துப் பார்த்தாள்.

"ச்சீ... நீ ஒரு ஆம்பளையா?"—என்று முகத்துக்கு நேராகக் கேட்க வேண்டும் போல இருக்கிறது.

எப்படி இவரால் இத்தனை மோசமாய் பேச முடிகிறது?

இது தன்னால் முடியாததை ஒத்துக் கொள்ளும் தாழ்வு மனப்பான்மையா?

இல்லை யார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்கிற விட்டேற்றித்தனமா...!

இப்படி கூட ஒரு ஆண் பிள்ளை சொல்லுவானோ?

இது பற்றி மறுநாள் விசுவத்திடம் அவள் சொன்ன போது, அவன் நைந்த குரலில் சொன்னான்.

"அண்ணாவுக்கு லேகியமும், மருந்தும் வாங்கிண்டு வர்றதே நான்தான் மன்னி. ஆனா, அந்த மருந்து எதுக்குன்னு எனக்கு தெரியாமப் போச்சு..."

"விசு! நாலு பேரைப் போல இவர் என்கிட்ட பிரியமா நடத்துக்கலையேன்னு நான் ஒரு நாள் கூட வருத்தப்பட்டதேயில்லை. இப்பத்தான்... இப்பத்தான்... வருத்தமாயிருக்கு. தாலி கட்டினவளை, சரணாகதியின்னு நம்பி வந்தவளை அசலான் கிட்டயிருந்து காப்பாத்தினாலே பெரிய பௌருஷம் இல்லையா. இதுக்கு கூடவா லேகியம் வேணும்?"

"இப்ப என்ன செய்யப் போறேள் மன்னி?"

"கிளம்பு. எப்படியும் அந்தக் கிழம், உன்னையும் என்னையும் சேர்த்து கதை கட்டி விடத்தான் போறது. அதுக்கு நிஜமாவே ஓடிடறது உத்தமம்"



"மன்னி..."

"இந்தா, நீ எப்பவும் என் கூடப் பொறந்த பொறப்பு மாதிரிதான். உனக்கு தெரியுமா... அசோக வனத்துல சீதை சிறைப்பட்டிருக்கறப்ப அனுமன் வந்து தேவி கிட்ட சொன்னானாம்.

"இந்தக் கணமே, என் தோளுல ஏறி உட்காருங்கோ. தூக்கிண்டு போய் ராமபிரான்கிட்டே சேர்த்துடறேன்னு சொன்னானாம்.

அதுக்கு தேவி, 'அப்படி செய்யறது என் ராமனோடப் பெருமைக்குக் குறைவாகும். நேரே வந்து ராவணனோட சண்டை போட்டு ஜெயிச்சு என்னை மீட்டுண்டு போகச் சொல்'லுன்னு சொன்னாளாம், அதுதான் எனக்கும் பெருமையின்னு வேற சொன்னாளாம்..."

"...."

"என் ராமன், ராவணனோட அட்ஜஸ்ட் பண்ணிட்டு இரு. உனக்கு இஷ்டமானா இன்னும் உதவிக்கு வர அனுமனோடு வேணுமானாலும் உன் இஷ்டப்படி இருங்கறார். ராமனை நம்பி பிரயோசனமில்லே. இங்கே அயோத்தியே இலங்காபுரி ஆயிடுத்து. எனக்கு உதவ உன்னை விட்டா வேற யாரும் கிடையாது. என்னைக் கொண்டு போய் எங்கேயாவது ஆசிரமத்துல சேர்த்துடு. இல்லே ஏதாவது பெரிய மனுஷாள் வீட்டுல சமையற்காரியா சேர்த்துடு..."

விசுவம் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான்.

அவனுக்கு வேதம் வேண்டாம். என்ன, ஒரு பெண்ணை அதுவும் குருவின் மனைவியை இழுத்துக் கொண்டு ஓடி விட்டான் என்கிற அவப் பெயர் கிடைக்கும். கிடைக்கட்டுமே, அதனால் என்ன...

இதற்கு மறுநாள்—

விடிகாலைப் பொழுதில் வாசலில் கோலம் போட்டு முடித்த சீதா உள்ளே வரவே இல்லை.

Vennila

பொழுது விடிவதற்கு முன்பே வாசற் கதவை திறப்பவள் சீதா தான்.

கோலத்தை முடித்து விட்டு காபிக்காக அடுப்பை மூட்டுபவளும் சீதாதான்.

அன்று அவள் வாசலில் போட்டிருந்த கோலம் விசித்திரமானது.

ஆஜானுபாகுவாய் பார்ப்பவர்கள் மனசில் பயத்தை உண்டு பண்ணும்படியாய்-கம்பீரமாய் அனுமனின் திருவுருவம்.

ஆவரது வலதுத் தோளில் சீதா தேவி. அவள் முகத்தில் அளவிட முடியாத சந்தோஷம். திருப்தி—

அது சரி.

சீதா காணாமல் போனதை முதலில் கண்டு பிடித்தது யார்?

வேறு யார்?

கிருஷ்ணன்தான்.

வாசற் கதவு வெட்டி மல்லாத்தி வைத்தது போலத் திறந்து கிடந்ததையும்–திண்ணையிலேயே கோலப் பொடிக் கின்னம் வைத்திருந்ததையும் கண்டு-ஒரு வேளை சீதா, விசுவத்துடன் புழக்கடை அறையில் இருந்தால் கையும் மெய்யுமாய் பிடித்து விடலாம் என்கிற நப்பாசையுடன் போனவர் அதிர்ந்தார்,

புழக்கடை திறந்திருக்க-மடி கனத்த பசுக்கள்-சீதாவின் வரவை நோக்கி சிலிர்த்துக் கொண்டு 'அம்மா' என்று குரல் கொடுத்தன.

## 7

நாலா பக்கமும் ஆள் பறக்க-நரசிம்மன், ராமுவை அழைத்து விசாரித்துக்கொண்டிருக்க-கிருஷ்ணன். தன்



...கூடத்தில் எடுபடாது என்று தெரிந்து, இரண்டாம் ...த் பெண்களிடம் கொட்டி முழக்கிக் கொண்டிருக்கிறார்.

''எனக்கு அப்பவே இந்தப் பய விசுவத்து மேலே ...தேகம். அவன் எங்கே இருக்கான்னு தெரிஞ்சா, இவளையும் கண்டு பிடிச்சிடலாம்.''

''இங்கே கிடைச்ச மாதிரி சாப்பாடும். வசதியும் இவளுக்கு வேற எங்கே கிடைக்கும்? நாயைக் குளுப்பாட்டி நடு வீட்டில வச்ச கதையா இல்லே ஆயிடுத்து...''

நரசிம்மன், அனைவரையும் அழைத்து கண்டிப்புடன் சொல்கிறார்.

''சீதாவைக் காணோம்கற விஷயம் வெளியில பரவ வேண்டாம்.நமக்குத்தான் அவமானம். தேடுங்கோ. போனமாக் கிடைச்சாலும் ரகசியமாக கொண்டு வாங்கோ.''

''விசுவத்தோட அப்பா மாயவரத்துல இருக்கார் அவரைத் தனியா அழைச்சு விஷயத்தைச் சொல்லுங்கோ அவன் அங்கே போக மாட்டான். அப்படியே போனாலும் உடனே நமக்கு தகவல் கொடுக்க சொல்லுங்கோ.'

பார்வதி மாத்திரம்-ரகசியமாய் அழுதாள். அது என்னவோ. சீதாவிடம் தப்பு இருக்காது என்றே அவளுக்குத் தோன்றுகிறது.

''இந்த மனுஷர் என்னவோ கிருத்திமம் பண்ணி யிருக்கணும். அதான் அந்தக் குழந்தை பயந்து போய் கிளம்பிடுத்து. ...வுனே... இந்தப் பாவத்துக்கு என்ன கதி கிடைக்கப் போறதோ?''



Vennila

இந்த நினைப்பினாலேயே அவள், அநாவசியமாய் சீதாவைப் பற்றி எதுவும் பேசவில்லை. உறைந்து போய் உட்கார்ந்திருக்கிறாள்.

மற்றவர்கள் பேசினாலும் ஒரு அதட்டல் போட்டு அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறாள்.

சீதா போய் ஏழாவது நாள் - நாணாதான் அந்த விஷயத்தை கொண்டு வந்தான்.

“காஞ்சிபுரத்துல கோவில்ல ஒரு பொண்ணு தினமும் ரெண்டு வேளையும் வித விதமாக் கோலம் போடறதாம் சீதாவா இருக்குமோன்னு சந்தேகமா இருக்கு. அவ கூட யாரும் இருக்கிறதா தெரியலே.”

அன்றே நரசிம்மனும், ராகவனும், நாணாவுடன் கிளம்பினார்கள்.

கிருஷ்ணனுக்கு கடைசி மட்டும் ஒரு வெறி. தானும் கூடவே போய்-அது சீதாதானா என்று பார்த்து விட்டு அவளாக இருந்தால். உண்மை எதையும் உளறாமல் இருக்கும்படி செய்து விட வேண்டும் என்று.

“நானும் போயிட்டு....”

—இப்படி ஆரம்பித்தவர்-பார்வதியின் பார்வையிலுள்ள உஷ்ணத்தைத் தாங்க மாட்டாதவராய் தலை குனிந்தார்.

“நீங்களும் போயிட்டா - இங்கே வீட்டை யாரு கவனிச்சுக்கறது?”

“அசுக்கில்லே பாரு....”



“எதுக்கில்லே? எல்லாம் எனக்குத் தெரியும். பேசாமக் கிடங்கோ.”

நரசிம்மன் தன் இரு பிள்ளைகளுடன் கிளம்பிப் போனவர்-மூன்றாவது நாள் விடிகாலையில்-ஊர் கண் விழிக்காத நேரத்தில் சீதாவையும், விசுவத்தையும் இழுத்துக் கொண்டு வந்து சேருகிறார்கள்.

சீதாவும் விசுவமும்தான்.

நரசிம்மன் உண்மையிலேயே நரசிம்மாவதாரம்தான் எடுத்திருந்தார். ராகவனின் முகம் கூட அவமானத்தில் கன்றிச் சிவந்திருந்தது.

“காஞ்சிபுரத்துல கோவில்லேயும்தெருவுலேயும் கோலம் போட்டு, கிடைச்ச பணத்துல சாப்பிட்டுண்டு ஊரைச் சுத்திண்டு இருந்திருக்காங்க. நான் போய் ‘கப்’புனு பிடிச்சேன்.”

—இது நாணா

செய்தி கேட்டு, ஓடி வந்திருந்த விசுவத்தின் அப்பா. மகனைப் போட்டு அடித்துப் புரட்டி எடுக்கிறார்.

விசுவம் அத்தனை அடிக்கும் கல்லாய் நிற்கிறான்.

“ஏண்டா டேய்...சோறு போட்டு பாடமும் சொல்லித் தந்த பெரியவங்களுக்கு நீ தார பரிசாடா இது?”

ராமு, சீதாவின் முகவாயைப் பற்றி, ‘வெடுக்’கென நிமிர்த்துகிறார்.

“என்னடீ இது அக்கிரமம்?”

Vennila

"நான் எதுவும் பேசறதுக்கு இல்லே மாமா...உங்க மாப்பிள்ளையைக் கேளுங்கோ. நான் செஞ்சதுதப்பா, சரியான்னு அவர் சொல்லட்டும்,"

"அவர் மகான் அவரைப் பத்திப் பேச உனக்கு என்ன யோக்கியதை இருக்கு?"

சீதா கண்ணீர் ததும்ப-ராகவனின் எதிரில் வந்து நின்றாள்.

"நீங்க் மகானா. அப்ப நான் யாரு?"

"........."

"சொல்லுங்கோ. நான் யாரு?"

"எதிர்த்தா பேசறே?"

தாண்டிக் குதித்து, அவனெதிரில் கிருஷ்ணன் வந்து நிற்க-சீதா ஆக்ரோஷமாய் அவனைப் பிடித்து அப்பால் தள்ளுகிறாள்.

"ச்சீ... போடா!"

"என்னது?"

கிருஷ்ணன் மட்டுமில்லை. நரசிம்மனும், மற்றவர்களும் கூட அதிர்ந்து போய் விட்டார்கள்.

கிருஷ்ணனுக்கு ஜுரம் காணத் தொடங்கி விட்டது. பார்வதியின் பார்வை வேறு ஜுரத்தை அதிகரிக்கச் செய்வதாய்...

அவர், தன் பயத்தை மறைக்க இரைந்து கூச்சல் போடுகிறார்.



"என்ன அநியாயம் இது. இவனோட சவகாசத்தால இந்த அளவுக்கு உன்னை கொண்டு போயிடுத்தா ராகவா பார்த்துண்டு நிக்கறியே?"

ராகவன், தந்தையின் பக்கம் பார்த்து நிதானமாய் சொன்னான்:

"அப்பா, அவ கொஞ்ச நாளாவே இப்படித்தான்... மூளை கலங்கினாப்பல பேசறா. ஹிஸ்டீரியாவா இருக்குமோன்னு சந்தேகமா இருக்கு. விசுவத்தோட ஓடிப்போனதுக்கு கூட இதுதான் காரணமா இருக்கும்."

"என்னடாது?"

"என்ன பண்ணறது. அவ தலை எழுத்து என்னவோ அதுபடி தானே எல்லாம் நடக்கும்."

சீதாவினால் பொறுக்க முடியவில்லை.

பூஜையறை வாசலில் எரிந்து கொண்டிருந்த குத்து விளக்கைத் தூக்கி - ராகவனின் நெஞ்சுக்கு குறி வைக்கிறாள்.

"உண்மையைச் சொல்லு. அன்னிக்கு ராத்திரி நடந்தது என்னன்னு நீ சொல்றியா-இல்லே நான் சொல்லட்டுமா. உன் கிட்ட எத்தனை கெஞ்சினேன். படுபாவி. இந்த வீட்டுலே தெய்வம் எங்கே இருக்கு?"

"ஐய்யோ ஐயய்யோ புருஷனையே குத்தப் போறாளே, கேட்பார் இல்லையா?"

கிருஷ்ணன் ஓடி வந்து, பலம் கொண்ட மட்டும் அவள் கையிலிருந்த குத்து விளக்கைப் பிடித்து இழுத்து, தூர வீசினார்.

Vennila

"ஒரு சங்கிலி கொண்டாங்கோ-இவளைக் கட்டிப் போட..."

இது வரையில் இத்தனையையும் பார்த்துக் கொண்டு எதுவும் செய்ய இயலாமல், அப்பாவின் பிடிக்குள் இருந்த விசுவம் ஓவென அழுகிறான்.

"மன்னியக் கட்டிப் போடாதீங்கோ. வேண்டாம். அவளுக்கு ஒண்ணுமே தெரியாது. அப்பாவி..."

"எல்லாத்துக்கும் காரணம்-நீதான்டா. படவா..."

—கிருஷ்ணன், தன் பங்குக்கு விசுவத்தை அடிக்கிறார்

சீதாவை-அவளுக்குப் பிரியமான இரண்டாம் கட்டு தாழவாரத்தில் தான் கட்டிப் போட்டுவைத்திருக்கிறார்கள்... இன்னமும்.

தனக்கு ஆண்மை இல்லை என்று சொல்லிக் கொள்வதை விடவும்-சீதாவுக்கு பைத்தியம் என்று சொல்லிக் கொள்வது-ராகவனுக்கு சுலபமாய் இருக்கிறது!

ராமனின் வீட்டிலேயே சிறை வைக்கப்பட்ட முதல் சீதா இவளாகத்தான் இருக்க வேண்டும்.

இப்பொழுதெல்லாம் அவள் வரையும் ஓவியங்கள் தெளிவாக இல்லை.

கோணலும், மாணலுமாய் ஒரே கிறுக்கல்.

ஆனால் ஒன்று—



பார்வதி-இப்பொழுதெல்லாம் இவளுக்கு சோறூட்டி-இரவு பக்கத்தில் படுத்து இவளை குளிக்க வைத்து இவளுடனேயே இருக்கிறாள்.

"நீ எதுக்கு அந்தப் பைத்தியத்தோட மாரடிக்கறே?"

—இப்படி ஒரு நாள் கிருஷ்ணன் கேட்டதற்கு-அவள், முகத்திலடித்தாற் போலச் சொன்னாள்.

"நன்னாயிருக்கறப்பவே இங்கே கழுகுக் கூட்டம் ஜாஸ்தி. நலங் கெட்டுப் போனதுக்கு அப்புறம், கேட்கணுமா? இந்த வீட்டுல பொம்மனாட்டிக்கு பாதுகாப்பா ஆம்பிளைகள்தான் இல்லே, பொண்ணுக்குப் பொண்ணாவது உபகாரமா இருக்க வேண்டாமா- எனக்குழந்தை இல்லையேன்னு நான இனிமே கவலையே பட மாட்டேன். சீதா போதும் எனக்கு.'

இந்த வார்த்தை கிருஷ்ணனுக்கு மட்டுமில்லை ராகவனுக்கும் சேர்த்துதான்.

விசுவம்-ஊரில் எங்கே சுற்றினாலும்-விடிகாலையில் இவர்கள் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்து விடுவான்.

யாரிடமும் பேச மாட்டான்.

பார்வதியைப் பார்த்தால் மட்டும் கேட்பான்.

"மன்னி சவுக்கியமா?"

"ஏதோ இருக்காப்பா"

என்றாவது ராகவனைப் பார்க்க நேர்ந்தால் ஒரு அலட்சிய சிரிப்பு.

Vennila

“அடத்தா—நீ ஒரு மனுஷன். உனக்கு ஒரு போசி பட்டம். உன்னை சுத்தி பத்து பேர் கூட்டம் வெட்கமாயில்லே..’

கிருஷ்ணனைப் பார்த்தால்-தெரு நாயைக் கண்டாற் போல உற்சாகமாய் கல்லை எடுத்துக் குறி பார்த்து ஏசுவான்!

மொத்தத்தில் அந்த வீட்டு வாசல்-தன் சிங்காரத்தை இழந்து-சின்னதாய் ஒரு நட்சத்திர கோலத்துடன் மவுனமாய் நிற்கிறது...

இன்னமும் நிற்கிறது...

Vennila